"போற்றுபவர் போற்றட்டும்;—புழுதிவாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து சொல்வேன்!
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன்; எவர் வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

தென்றல்

ஆசிரியர் : கண்ணதாசன்

உள் நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணா. வெளி நாடு மூன்றணா. காரியாலயம்: 'தென்றல்' சென்னை - 4.

மலர் 1	சென்னை	9—10—1954	சனிக்கிழமை	இதழ் 15

பாபுஜிக்கு பக்தன் எழுதும் கடிதம்!

கண்டவர் நுழையும் சத்திரமா காங்கிரஸ்?

27 லட்சம் உறுப்பினர்கள் குறைந்து போயினரே!

அன்புள்ள நேருஜிக்கு, அடியேன் வணக்கத்துடன் எழுதிக் கொண்டது, முடிசூடா மன்னரான தங்களின் வழிகளில் செல்லும் காங்கிரஸ் தொண்டர்களில் நான் ஒருவன். பெயர் உங்களுக்கு ஞாபகமிருக்க நியாயமில்லை. நான் உங்களைப் பார்த்திருக்கிறேன். நீங்கள் என்னை பார்த்திருக்க முடியும். சென்னையில் நீங்கள் சென்ற தடவை ஊர்வலம் வந்தபோது உங்களைப் பார்க்க நான் மரம் ஒன்றின் மீது ஏறி நின்றேன்—மவுண்ட் ரோடு மூலையில்.

மகாத்மா அந்தப் படுபாவியால் சுடப்பட்ட பின்னர் தேசத்தை நல்ல பாதை நோக்கி அழைத்துச் செல்லும் மகத்தான பொறுப்பை ஏற்றுக் கொண்டீர்கள். நான்கூட இன்னமும் வந்தேமாதரம் என்று தான் கோஷமிடுகிறேன்.

எதிர்க்கட்சிக்காரர்கள் காங்கிரஸ் மீது கூறுகிற குற்றச்சாட்டுக்களை யெல்லாம் உங்களுக்கு எழுதவேண்டுமென்று எனக்கு நீண்ட நாளாக ஆவல். பலர்காங்கிரசைத் திட்டும்போது அடியேன் மனம் கொதிக்கிறது. குறை கூறுபவர்களை ஏதாவது செய்யலாமா என்று எண்ணினேன். மதுரை கருப்பையா குடும்பத்திற்கு தாங்கள் செக் ஒன்று அனுப்பியதும் என் குடும்பத்தைப் பற்றியும் எனக்கு கவலை விட்டுப் போய்விட்டது.

நேற்று நான் பத்திரிகைகளைப் பார்த்தேன்; எனக்கு மிகவும் வருத்தத்தையும் வேதனையையும் அளிக்கும் செய்தி ஒன்று காணப்பட்டது. திடுக்கிட்டேன். துடித்தேன். கண்ணீர் சிந்தினேன். கடந்த கால என் பணியையும் உங்கள் தொண்டையும் நினைத்தேன்; வேதனை இன்னும் அதிகமாகிறது.

சமீபத்தில் டில்லியில் நடைபெற்ற காங்கிரசின் காரியக் கமிட்டி கூட்டத்தில் காங்கிரசின் உறுப்பினர் தொகை குறைந்து போய்விட்டது என்று கூறினார்களாமே! உண்மையா?... 1952ல் 88 லட்சமாக இருந்த உறுப்பினர் எண்ணிக்கை 1953-ல் 61லட்சமாகி விட்டது என்று காங்கிரஸ் செயலாளர் கணக்கு கொடுத்தாராம். காங்கிரசின் சாதாரண உறுப்பினர் தொகையில் ஒரே வருஷத்தில் 27 லட்சம் பேர் குறைந்துபோய் விட்ட தென்றால் நிலமை மோசமாகி விட்டதென்றே கருதுகிறேன். மேலும், தீவிர உறுப்பினர்களின் எண்ணிக்கையும் 3 லட்சத்திலிருந்து 71,080 ஆக குறைந்து விட்டதாமே? தீவிர உறுப்பினர்கள் ஒரே வருஷத்தில் இரண்டு லட்சம் பேர் குறைந்து விட்டார்கள் என்று தெரிகிதே.

எனக்கு இப்படி உறுப்பினர்கள் லட்சக் கணக்கில் குறைந்து போனார்கள் என்றவுடன் என்ன செய்வதென்றே புரியவில்லை. 'ஓ' என்று ஒருமுறை அழுதும்விட்டேன்.

காங்கிரசில் உறுப்பினர்கள் குறைந்து போனதற்கான காரணங்களை நீங்கள் யோசித்தீர்களோ என்னவோ. நானறியேன். தமிழ் நாட்டில்காங்கிரஸ்காரர்களின் எண்ணிக்கை குறைந்து போனதற்கு என்ன காரணம் என்பதை காரியக் கமிட்டிக்கு வந்திருந்த கனம் காமராஜரைக் கேட்டீர்களா? அல்லது அவராவது, தானே கூறினாரா? எப்படியோ போகட்டும். காங்கிரசுக்கு இங்கே பெருத்த ஆதரவு இருப்பதாக எல்லா காங்கிரஸ்காரர்களும் பேசிக் கொண்டே இருக்கிறார்கள். உண்மை என்னவென்பதும், ஊராளும் கட்சிக்கு தமிழ் நாட்டில் இருக்கும் செல்வாக்கு எவ்வளவு என்பதையும், அது ஏன் இப்படி குறைந்துபோய் விட்டது என்பதையும் அடியேன் கொஞ்சம் அறிவேன்.

இங்கே திராவிடர் இயக்கத்தின் பலம் பெருகுகிறது. அவர்கள் வடநாட்டு ஆதிக்கம் என்று பேசுவதைப் பலர் இப்போது சிந்திக்கத் தொடங்கி விட்டார்கள். இப்போது அவர்கள் காங்கிரஸ் ஆட்சியில் உள்ள ஊழல்களைப் பற்றி கூறும்போது என் மானமே போய்விட்டது என்று எண்ணுகிறேன்.

புனிதமான நீங்கள் வைத்திருக்கும் வெளி நாட்டிலாகாவில் ஊழல்கள் இருக்கிறதாம். கூறுகிறார்கள் திராவிட இயக்கத்தார். வெளி நாட்டில் தூதுவர் அலுவலகம் ஒன்றில் 60 பேருக்கு சிற்றுண்டிச்சாலை நடத்தி ரூ. ஒருலட்சத்திநாற்பதாயிரம் பாழாகி விட்டதாம். நான் கூட கொஞ்சம் யோசித்தேன். எங்கள் கிராமத்தில் ஏழு சின்ன டீ கடை இருக்கிறது. அதிலே தினம் அஞ்சு ரூபாய்க்கு வியாபாரம் நடந்தாலே எதேஷ்டம் அந்த டீ கடைக்காரர் போன மாதம்தான் ஓட்டு வில்லை வீடு ஒன்று கட்டி கிரகப்பிரவேசம் செய்தார். ஒரு வருஷத்தில் கிடைத்த லாபம் இதுவென்று ஊரிலே பேசிக் கொள்கிறார்கள். எட்டு மாதம் சிற்றுண்டிசாலை நடத்தி ஒன்றரை லட்சம் பாழ் என்று சொன்னால் எப்படி நம்புவது? இந்த சேதியை அவர்கள் கொட்டை எழுத்துக்களில் போட்டுவிட்டார்கள். "இது பெரிய அநியாயமுங்க; பாதாம் அல்வா தின்னாக்கூட 1½ லட்சம் நஷ்டமாகாதுங்க; இதிலேஏதோ

(5—ம் பக்கம் பார்க்க)

எண்ணம்

பத்திரிகைத் தொழிலையும் எழுத்தாளி வாழ்வையும், கட்சிப் பற்றையும் ஒருங்கே கொண்டவன் இருக்கிறானே, அவனுக்கு ஏற்படும் அனுபவங்கள் மிகமிக விசித்திரமானவை. நாலுதிசையும் அவனுக்கு நண்பர்கள் இருக்கிறார்கள். அவர்கள் நாற்பதுக்கு மேற்பட்ட ரகங்களில் இருக்கிறார்கள். அவன் சந்திக்கிறபலபேரும் பல தினுசுகளாகக் காணப்படுகிறார்கள். லோகோபின்னருசி' 'உலகம் பலவிதம்' என்கிற பழமொழிகளெல்லாம் அவனுக்கு அனுபவ பூர்வமாக விளங்குகின்றன, அன்னையின் கருவில் பிண்டமாகி, மண்ணிலே விழுந்து, மழலைபயின்று, தவழ்ந்து, எழுந்து நடந்து பள்ளிக்குச் சென்று பயின்று, வயதேற ஏற. எவ்வளவு பெரும் படிப்புப் படித்துப் பட்டம் பெற்று விட்டாலும், ஒரு மனிதனுக்கு மேற் கண்ட மூன்று துறையிலும் தொடர்பில்லாவிட்டால், அவன் உலகத்தைச் சரிவர உணரமுடியாது.

அதுவும் இந்தப் பத்திரிகைத் தொழில் இருக்கிறதே, அதில் ஏற்படும் அனுபவமே அலாதி, அதில், பத்திரிகை ஆசிரியன் தன் கருத்தையே பூரணம் பெற்றதாகக் கருதி இறுமாந்துவிட முடியாது. ''நாம் சொல்லிவிட்டோம்; எல்லோரும் ஏகோபித்து அதை ஆதரித்து விடுவார்கள்'' ''என்று முடிவு கட்டிவிட முடியாது; தான் நினைப்பதே பெரும் பாலோரின் விருப்பமாக இருக்கும் என்று சிந்திக்கக் கூட முடியாது. பல பேருக்குப் பல யோசனைகள் தோன்றுகிற மாதிரி, தனக்கும் ஒரு யோசனை தோன்றுவதாகத்தான் அவன் நினைக்கமுடியுமே தவிர, ''நமது யோசனைக்கு மறுப்பில்லை'' என்று கருதிவிட முடியாது. ஜனநாயகம் வளர வளர, சுயசிந்தனை பெருகப் பெருக, சரியோதப்போ, சிந்திக்கிற பண்பு எல்லோருக்கும் வந்துவிட்டது. பத்து ஆண்டுகட்கு முன்பு எல்லாம், ஒரு பத்திரிகையைக் கூர்மையாகப் படித்து, அணு அணுவாக விமர்சனம் செய்யத் தெரிந்த ரசிகர் மிகவும் குறைவு. இன்றைக்கோ, பத்திரிகை படிப்பதே, விமர்சனம் செய்வதற்குத்தான் என்கிற அளவுக்கு அறிவு வளர்ந்துள்ளது.

''எல்லோரும் இந்நாட்டு மன்னர்'' என்பது செயல் முறையில் இருக்கிறதோ இல்லையோ, தமிழ் நாட்டில் பிரதியொரு மனிதனின் இருதயத்திலும் ''மன்னர்குணம்'' இருக்கிறது. அதுவும் பத்திரிகை ரசிகனுக்கு ''சக்கரவர்த்தி குண''மே இருக்கிறது, எடுத்தெறிந்து பேசுவதிலும், திடீரென்று அணைத்துக்கொள்வதிலும் அவனுக்கு நிகர் அவனேதான். முக்கியமாக, சுயமரியாதை இயக்க ரசிகன் இருக்கிறானே, அவன்தான் பயங்கரமான பேர்வழி! அடடா! அவன்தான் பத்திரிகையை எவ்வளவு கூர்மையாகப் படிக்கிறான்! ஆசிரியன் கண்ணுக்குத் தப்பிய குறைகளெல்லாம் அவனுக்கு எவ்வளவு சுலபமாகத் தெரிந்து விடுகின்றன! பத்திரிகையின் ஒரு மூலையில் ஒரு எழுத்துப் பிசகி இருந்தாலும் சரி, அதை அப்படியே எடுத்துக் காட்டிக் கடிதம் எழுதுகிறான். ''ஓய் ஆசிரியரே! இதைக்கூடக் கவனிக்காமல் ஏனையாவிட்டீர்?'' என்று கேட்கிறான். ''அடுத்த இதழில் திருத்திக்கொள்ளும்!'' என்று அறிவுரை வழங்குகிறான். அவனுக்குப் பிடிக்காத விஷயத்தைக் கொடுத்து விட்டால், ''உமது பத்திரிகையில் இது எங்களுக்குத் தேவையில்லை'' என்று முகத்தில் அடித்தாற்போல் எழுதுகிறான். ''இவர் பெரியவர்; இவர் சிறியவர்'' என்ற பேதாபேத மெல்லாம் அவனுக்குக்கிடையாது. ''தவறு செய்தவன் தண்டனையை அனுபவித்தே ஆகவேண்டும்'' என்பதிலே அவன் உறுதியாக நிற்கிறான்!'' ''உமக்கு இந்தரகமான எழுத்துத்தான் நன்றாக எழுதவருகிறது.'' என்று, நமது சக்தியையே எடைபோட்டுக் கூறுகிறான்—அப்பப்பா! பகுத்தறிவுக்கொள்கையாளன் பத்திரிகை நடத்தினால் எவ்வளவு ஜாக்கிரதையாக நடத்த வேண்டும் என்பதையே நமது ரசிகன் அடிக்கடி நினைவுபடுத்திவிடுகிறான், ஆனால் அதே நேரத்தில் நல்லதைக் கண்டுவிட்டானானால் தலையிலும் தூக்கிவைத்துக் கொள்கிறான்: அண்ணா ஒருவரது எழுத்தும் பேச்சும், இந்த நாட்டிலே எவ்வளவு சக்திபடைத்த சமுதாயத்தை உற்பத்தி செய்திருக்கிறது என்பதை இதிலிருந்து தெரிந்துகொள்ள முடிகிறது.

* * *

தென்றலில் ஒரு இதழில் 'விதி' என்கிற வார்த்தை வந்து விட்டது. அதை அனுப்பிய கட்டுரையாளர், கட்சிச் சார் பற்றவர். அவர், ''விதியே அவனைக்கொன்றது'' என்று எழுதி விட்டார். பல முறை 'புரூப்' படித்தும் நமது கண்ணுக்கு அது தப்பிவிட்டது. உடனே மதுரையிலிருந்து ஒரு தோழர், ''நீர் பகுத்தறிவுக்காரர் என்பதையும் மறந்து இதை வெளியிட்டுள்ளீரே!'' என்று கோபமாக எழுதிவிட்டார்! 'பகைவனின் காதலி' என்ற நாடகத்தில் ஒரு வரி, இடையில் விடப்பட்டு விட்டது. அது என்ன வரி என்று ரசிகர்களுக்குத் தெரிய முடியாது. நாடகத்தைப் படிக்கும்போது அந்த வரி இல்லாத குறை பலபேருக்குத் தெரிய நியாயமும் இல்லை. ஆனாலும் சுயமரியாதை ரசிகன், அந்தக் குறையைக் கண்டு, அந்த வரி இப்படித்தான் இருந்திருக்க வேண்டும் என்று எழுதியும் அனுப்பிவிட்டான்.

வேறொரு நண்பரின் கவிதையிலே, ஒரு வரியில் மட்டும் இலக்கணம் பிசகி விட்டது. உடனே ஒரு ரசிகன், அந்த வரியைத் திருத்தி, இலக்கணம் இன்னவகையில் தட்டுகிறது என்று எழுதியும் அனுப்பி விட்டான்.

ஒரு ரசிகன் தென்றலை, கவிதையிலே விமர்சனம் செய்துள்ளான்.

சுருக்கமாகச் சொன்னால் ரசிகர்கள் எட்டுத்திசையிலும் ஈட்டிகளை வைத்துக்கொண்டு நம்மை நேர்வழியில் நடக்க வைக்கிறார்கள்! இந்த அனுபவம் பிரதியொருமனிதனுக்கும் தேவை என்பது என் துணிவு. அப்போதுதான் இன்றைய திராவிட சமுதாயத்தைப்பற்றி நன்றாக உணர முடியும்.

திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருப்பவர்கள் அனைவரும் எப்படிப்பட்டவர்கள் என்று, ஒவ்வொருவரையும் போய்ப்பார்த்துத் தெரிந்து கொள்ள முடியாது. பத்திரிகையிலிருந்து, எனக்கு நன்றாகப் புரிகிறது. ஒவ்வொரு தோழனும் அறிவுக்கடலாகக் காட்சியளிக்கிறான். அவனவன் சுவை மாறுபடுகிறதே தவிர, கொள்கையில் ஒவ்வொருவனும் உறுதிதளராதவனாக இருக்கிறான். ஜனநாயகப்பண்பு, அவனுக்குக் கைவந்த கலையாவிட்டது.

இவ்வளவு பெருமைக்குரிய இயக்கத்திலே பணிபுரிவது பற்றி பத்திரிகை ஆசிரியனுக்கு பெருமையாகத்தான் இருக்கிறது. அதனால் அவன் ஒவ்வொரு விஷயத்திலும் நின்று நிதானித்து, இம்மியும் தவறாமல் நடப்பதையே தன் கடனாகக் கொள்கிறான். சுற்றிநிற்கும் சுயமரியாதைப் பொது ஜனப் போலீஸாருக்குக் கட்டுப்பட்டே அவன் பணியைத் தொடர்கிறான்.

(தொடரும்)

இதோ! தலைசிறந்த படங்கள்!

திருச்சி தஞ்சாவூருக்கு நாங்கள் விநியோகிக்கிறோம்!

நேஷனல் புரொடக்ஷன்ஸ்:

அம்மையப்பன்

மதராஸ் பிக்சர்ஸ்:

செந்தாமரை

கஸ்தூரி பிலிம்ஸ் — **மேனகா**

பத்மினி பிக்சர்ஸ்: — **முதல் தேதி**

மற்றும்

கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி, சொர்க்கவாசல், நால்வர், பணம், ஆசைமகன், மாங்கல்யம்

மற்றும் பல படங்கள்!

ராணி பிக்சர்ஸ்

திருச்சி.

குடிசைத் தொழிலை ஆதரியுங்கள்

படங்களுக்கும், போட்டோக்களுக்கும், மற்றும் பலவிதப்படங்களுக்கும், உபயோகமாகும் படச்சட்டங்கள் எங்களிடம் தயாராகின்றன,

மொத்தத் தேவைக்குக் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதுங்கள்:

தமிழ்நாடு பிரேம் ஒர்க்ஸ்

(படச்சட்ட தயாரிப்பாளர்),

சைதாப்பேட்டை,

வேலூர் (வ. ஆ.)

தொடர் கதை

தமிழாக்கம்: ரா. வேங்கடசாமி

காம்பர்டன், தன்னுடன் ஆக்டேவை இருந்து கொள்ள சொன்னது எதனால்? தான் காதலி வைத்திருப்பதுபோல் இரகசியமாக தன் மனைவியும் வைத்துக் கொள்ளட்டுமே என்றா? அதற்கு ஆக்டேவ் தானா கிடைத்தான்? பாவம் ரோசி! அவள் உடலில் என்ன நோயோ! அதுதான் ஆக்டேவுக்கு புரியாததாக இருந்தது.

இதற்குப் பிறகு அவனது எண்ணங்கள் வேறு திசையில் திரும்பின. அவன் பார்த்த பெண்களின்முகம் வரிசையாக அவன் மனக் கண்முன்னால் காட்சியளித்தன. அவன் இவ் வீட்டுக்கு வரும்போது தொட்டிலை ஆட்டிக்கொண்டிருந்த பெண்—அதாவது அவனது பக்கத்து அறையில் குடியிருப்பவள்—திருமதி பீசன். அவளுடைய கண்களில் கவர்ச்சி அதிகம் காணோம். ஏதோவரட்டுப் பார்வை பார்த்தாள். அடுத்தபடி திருமதி ஹௌடின். அழகுக்கு ஒரு உபமானம்! கறுப்பு உடையில்தான் என்ன கம்பீரமாக காட்சியளித்தாள் அவள்? அதற்குப் பிறகு ஜோஸ் ராண்டும் அவளது புதல்விகளும், அவர்கள் மட்டும் என்ன? அவர்கள் சிரிப்பே ஒருவனை கொன்று விடுமே!

அடேயப்பா! பாரிசில் அவன் கால் வைத்து சில மணி நேரந்தான் ஆயிற்று. ஆனால் அதற்குள் எவ்வளவு விஷயங்களை கற்றுக் கொண்டான்? பெண்ணின் உறவில்—அவளால்-பெயர் எடுக்கவேண்டும். என்பதுதான் ஆக்டேவின் எண்ணம். ஆனால்.........இப்போது யாரைத் தேர்ந்தெடுப்பது என்றுதான் அவனுக்குப் புரிய வில்லை!

ஆனால் அவன் மனமோ, அவனை எதிலும் ஒரு முடிவுக்கு வரவிடவில்லை. பெண்களின் உறவு! சே சே!! அவனுக்கு அந்த எண்ணம் சற்று நேரம் பிடிக்க வில்லை.

"என்ன இந்த பெண்களே என்னை தூங்கவிடமாட்டார்கள் போலிருக்கிறதே!" என்று அலுத்துக்கொண்டான், புரண்டுபடுத்தபடி.

மறுபடியும், அவன் மனம் அவனோடு பேசியது. "இப்போது எல்லாமே எனக்கு ஒன்றுதான். யாருக்கு என் மேல் ஆசை இருக்கிறதோ, அவள் என்னை அடைந்து அனுபவிக்கட்டும். இல்லாவிடில் எல்லோரையும் நான் வசப்படுத்தி, அவர்களைத் திருப்திபடுத்துகிறேன். அதை பிறகு கவனிக்கிறேன். இப்போது தூங்குகிறேன்!" என்று கண்களை இறுக மூடிக்கொண்டு படுத்தான். தூக்கம் அவனைக் கவ்விக்கொண்டது.

திருமதி ஜோஸ்ராண்டு தன் அறைக்குள் நுழைந்தவுடன் கதவைப் படீரென சாத்தினாள். கடந்த இரண்டு மணி நேரமாக அடக்கி வைத்திருந்த கோபம் இப்போது மீண்டும் எழுந்துவிட்டது. திருமதி டம்பர்வில்லி அவர்களை விருந்துக்கழைத்திருந்தாள். அதை சாக்காக வைத்துக்கொண்டு ஜோஸ்ராண்டு அங்கு போயிருந்தாள் வேறு வேலைக்காக! இளைய மகள் பெர்த் இன்னும் கல்யாணமாகாமல் இருந்தாள். அவளுக்கு மாப்பிள்ளை தேடினால்தானே ஆகும்? பெர்த்திடம், திருமதி ஜோஸ்ராண்டு, விருந்தின்போது இப்படி, அப்படி நடந்து கொள்ளவேண்டும் என்று சொல்லியிருந்தாள்... இருந்தும் அவளால் கணவனை தேர்ந்தெடுத்துக்கொள்ள முடியவில்லை, தாய்க்கு கோபம் வராதா? பட்ட கஷ்டமல்லவா வீணாகப் போய்விட்டது!

தங்கள் தாய்க்கு கோபம் வந்தால் அவள் எப்படி நடந்து கொள்ளுவாள் என்று புத்திரிகளுக்குத் தெரியும். அவர்கள் பேசாமல் ஒரு இடத்தில் பதுங்கி விட்டார்கள். ஒவ்வொரு தடவையும் இம்மாதிரி ஏற்படுவது அவர்களுக்கு சகஜம்! தாயின் ஆசை சிதறிப் போனால் இந்த கதிதான். கைக்குட்டையினால் முகத்தை லேசாக மறைத்துக்கொண்டு, மிதியடிகள் ஈரத்தில் நனைய அவர்கள் தங்கள் வீட்டை நோக்கி வந்துகொண்டிருந்தார்கள், அவசர அவசரமாக! வழியிலே தாயார் சண்டையிட ஆரம்பித்து விட்டால்...என்ற கவலை குழந்தைகளுக்கு. அவர்களுடைய வீட்டருகில் வந்த போது இன்னொரு சம்பவம் நடந்தது. துவிரேயர் குடும்பத்தார் அமர்ந்திருந்த வண்டி அவர்களைக் கடந்து சென்றது. அவர்கள் முன் நடந்து செல்வது அவமானத்திற்குரிய விஷயமல்லவா! திருமதி ஜோஸ்ராண்டுக்கு கோபம் தான் அதிகமாகியது. தெருவில்தான் அங்கில்லை யென்றால் வீட்டில் ஆக்டேவ் வேறு எதிர்பட்டுத் தொலைத்தான்! அவன் முன்னால் மீண்டும் கௌரவமாக நடந்து போனார்கள்! தங்கள் அறைக்குள் புகுந்தவுடனே அவசரமாக நாற்காலி, மேஜை இவைகளின்மீது இடித்துக்கொண்டு ஓடினார்கள் குழந்தைகள். சாப்பிடும் அறையில் ஒரு சிறு விளக்கை வைத்துக்கொண்டு திருவாளர் ஜோஸ்ராண்டு ஏதோ எழுதிக்கொண்டிருந்தார்.

அவர் எதிரில் இருந்த நாற்காலியில் போய் 'பொத்' தென்று உட்கார்ந்தாள் ஜோஸ், "இத்தடவையும் தோல்வி" என கூறிக்கொண்டு. தலைபக்கம் போடப்பட்டிருந்த கைக்குட்டையை முரட்டுத்தனமாக பிய்த்து எறிந்துவிட்டு, மேலே அணிந்திருந்த அங்கியை கழற்றினாள். அவள் செயலில் ஆத்திரம் காணப்பட்டது. மேலங்கி கழற்றப்பட்டவுடன், அவளது வழவழப்பான தோள்கள் வெளியில் தெரிந்தன. இளமை அவளுடலில் இன்னும் இருப்பதற்கு அவைகளே சான்று!

"ஹா !" என்றார் விட்டுக்காரர். அவர் எதைக்கண்டு அப்படி சொன்னார் என்று தெரியவில்லை. தனது மனைவியும், குழந்தைகளும் உள்ளே புகுந்த வேகத்தையும், அவர்கள் நடத்தையையும் கவனித்துத்தான் அவர் தன் ஆச்சர்யத்தை வெளியே, ஒரு வார்த்தையில் கொட்டினார்! கண்கள் விழித்தன. நிலை சங்கடமாக இருந்தது அவருக்கு. மனைவியின் உபத்திரவத்தை அவரால் தாங்க முடியவில்லை.

அதையெல்லாம் பொருட்படுத்தாமல் மீண்டும் அவர் எழுவதில் முனைந்தார். 'தோல்வி' என்றே ஒரே வார்த்தையில் தன் கோபத்தை வெளிக் கொட்டிவிட்டு, தன்னைக் கடந்து படுக்கையறைக்குப் போய்விடுவாள் என்று தான் திரு ஜோஸ் நினைத்தார். அவர் எதிர்பார்க்காத வகையில் அவர் நாற்காலியில் அமர்ந்து, அவரை வைத்த விழி வாங்காமல் பார்க்கத் தொடங்கினாள். அந்தப் பார்வைக்கு அர்த்தம் என்ன வென்று அவருக்குத் தெரியும். பேனா அடிக்கடி காகிதத்தின் மேல் நின்றுவிட்டது; வழவழப்பான காகிதத்தில் அது ஏன் ஓடவில்லை? இருந்தாலும் அவர் வாய் திறந்து எதுவும் திருமதியிடம் பேசத் துணியவில்லை. அவளாகவே பேச ஆரம்பித்தாள். எப்படியாவது விஷயம் வெளியானால் போதாதா?

இம்மாதிரி என்றால் என்றும் பொறுமையோடு இருக்க முடியாது. என்றாவது ஒரு நாள் காலை, உங்களையும், உங்கள் செல்வப் புதல்விகளையும் விட்டுவிட்டு நான் எங்காவது போய்விடத்தான் போகிறேன். தரித்திர வாழ்க்கை நடத்தவா நான் பிறந்தேன்? நீங்கள் என்னை நன்றாக ஏமாற்றிவிட்டீர்கள்! சரிவர காப்பாற்றத் திறமை இல்லையென்றால் ஏன் நீங்கள் வீணாக என்னை கல்யாணம் செய்து கொண்டீர்கள்?" திருமதி இந்த இடத்தில் நிறுத்தினாள்.

"நான்தான் வருடத்திற்கு எட்டாயிரம் பிராங்குகள் சம்பாதிக்கிறேன்!" என்று முணு முணுத்தார் காஷியர் ஜோஸ் ராண்டு.

"நல்ல நிலைதானே அது?" என்று அவர் மீண்டும் சொன்னார் திருமதி பேசாமல் இருந்த போது. 'என்ன? இதுதான் நல்ல நிலைமையா? முப்பது வருடங்கள் கஷ்டப்பட்ட பிறகு இதுகூட இல்லை யென்றால் என்ன பிரயோஜனம்? பேச்சினால் என்னை ஏமாற்றி மணம் புரிந்துகொண்டீர்கள். இப்போதுமட்டும், அப்படி ஏதாவது நடந்தால் நான் எவ்வளவு ஜாக்கிரதையாக இருப்பேன் தெரியுமா?" என்று கூறிவிட்டு அவள் பெருமூச்சு விட்டாள்.

இதைக் கேட்டவுடன் ஜோஸின் முகம் வெளுத்துவிட்டது. நடுங்கும் குரலில் அவர் பேசினார். போகப் போக குரலில் சூடேறியது.

"கடந்த காலத்தைப் பற்றி பேசி வீணாக காலத்தை விரயமாக்குகிறாய். அப்போது நடந்ததற்கு யாருமே பொறுப்பாளிகள் அல்ல! உன் தகப்பனார், எனக்குத் தருவதாக வாக்களித்தாரே, வரதட்சணை அதை அவர் தந்தாரா? அந்த முப்பதாயிரம் பிராங்குகள் ஏமாற்றப்பட்டதுதானே?"

"என்ன முப்பதாயிரம் பிராங்குகளா?"

"ஆம்! முப்பதாயிரம் பிராங்குகள்தான்! அன்னைக்கு ஆச்சரியமாக இருக்கிறதா? என் தகப்பனாருக்குத்தான் அதிர்ஷ்டம் இல்லையென்றால், உன் தகப்பனாருமா என்னை ஏமாற்ற வேண்டும்? என்ன உன் தகப்பனார் மீதம் வைத்து விட்டுப்போனார் என்று என்னால் கண்டுபிடிக்கவே முடியவில்லை! நான் நன்றாக வஞ்சிக்கப்பட்டேன்!"

இதைக் கேட்டவுடன் திருமதியின் முகம் வாடிவிட்டது. அவளது கணவனின் பேச்சுகள் ஆணித்தரமாக இருக்கவே அவளால் பதில்கூட பேச முடியவில்லை.

"அப்பாவை ஒன்றும் குறை கூறாதீர்கள்?" என்றாள்.

அத்தியாயம் 5

முதியவர்களின் வாக்குவாதம் ஒரு மாதிரியாக முடிந்தது. உள்ளே இருந்த இளம் பெண்கள் இதை யெல்லாம் கேட்டுக்கொண்டும் பார்த்துக் கொண்டும் இருந்தார்கள். அவர்களுக்கு இதெல்லாம் சகஜம். ஏதோ புதிதாக நடந்தால்தானே ஆச்சர்யப்படுவதற்கு?

பெரிய மகள் ஹார்டென்ஸ், தன் தங்கை பெர்த்திடம் மெதுவான குரலில் ஆரம்பித்தாள்.

"வர வர அப்பாவுக்கும், அம்மாவுக்கும் மூளையே இல்லாமல் போய்விட்டது. சண்டை பிடிப்பதால் என்ன லாபம்? சகஜமான நிலைமை அம்மாவுக்கு, இரண்டு தினங்கள்வரை வராது! நாளைக்கு அப்பா காரியாலயத்தில் உடல் நலமில்லாமல் அமர்ந்திருப்பார். அதுதான் மிஞ்சுகிறது கடைசியில்! எனக்கென்னவோ, நமக்கு நம் கணவர்களை நாமாக தேடிக்கொள்ளும் வயதாகிவிட்டது என்றுதான் தோன்றுகிறது!" என்றாள். இந்த முணு முணுப்பு திருமதி ஜோஸின் காதில் விழுந்து விட்டது. காஷியர் ஜோஸ் பழையபடி குனிந்து எழுத ஆரம்பித்துவிட்டார். அவர் கைகள் என்னமோ இன்னும் நடுங்கிக்கொண்டுதான் இருந்தது அவரது கவனம் தீவிரமாக காகிதத்தில் பதிந்திருந்தது; அடிபட்ட பெண் சிங்கத்தைப்போல் இப்படியும் அப்படியுமாக சற்று நேரம் திரிந்து கொண்டிருந்த ஜோஸ் அம்மாள் மகளின் முணு முணுப்பு காதில் விழுந்தவுடன் அவள் எதிரில் போய் நின்றாள்.

"நீ இப்படியே பேசிக் கொண்டிருந்தால், நிச்சயமாக ஒரு முட்டாளாகி விடுவாய்! உன் காதலன் வர்தேயர், தன் ஆசை நாயகியைவிட்டு உன்னை ஒரு நாளும் கல்யாணம் செய்து கொள்ள முன் வரமாட்டான்!' தாயார் இப்படி சொன்னதும் ஹார்டென்ஸ் சீறி எழுந்தாள்.

"அது என் சொந்த விஷயம்!" வார்த்தைகள் வெடித்தன அவள் வாயிலிருந்து.

ஜோஸ் அம்மாள், அவளருகிருந்து கிளம்பி பெர்த்தின் அருகே போய் நின்றாள். ஆள்காட்டி விரலை அவள் பக்கம் நீட்டி,

"நீயும் உன் தமக்கையைப் போல் இருந்தாயானால், என்னால், உனக்கு ஆகவேண்டிய காரியங்கள் எதுவும் இல்லை!"

இப்படிக் கூறிவிட்டு அவள் அறையில் குறுக்கும் நெடுக்குமாக நடக்கலானாள். அவள் காலடி சப்தம் கீழே இருந்தவர்களுக்குக்கூட கேட்டிருக்கக் கூடும்! அவள் தனக்குத்தானே ஏதோ பேசிக்கொண்டாள். அவள் செய்ததுதான் சரி என்று மற்றவர்கள் சொன்னால், அதுபோதும் அவளுக்கு! எவ்வளவு நேரம் அப்படி நடந்துகொண்டிருக்க முடியும்?

அவள் பெர்த்தின் பக்கமாகப்போனாள்.

"ஏண்டி! இப்போதாவது சொல்லேன் உண்மையை? எப்படியடி இது தோல்வியடைந்தது?" என்றாள்.

"எனக்கொன்றும் தெரியாதம்மா!" என்றாள் பெர்த்.

"அவன் சர்க்கார் காரியாலயத்தில் இரண்டாவது, தலைமை குமாஸ்தா வேலை பார்க்கிறவன். வயது முப்பதுகூட ஆகவில்லை. அவனுடைய எதிர்காலமோ மிகவும் நன்றாக இருந்தது. மாதம் முதல் தேதியானவுடன் பணத்தைக் கொண்டு வந்து உன் கையில் தவறாமல் கொடுப்பான். இதைப்போல் ஒரு நல்ல சம்பந்தம் நமக்கு கிடைக்குமாடி? இதை உன் முட்டாள் தனத்தால் விட்டுத் தொலைத்து விட்டாயே?"

"என்னால் ஒன்றும் நடக்கவில்லையம்மா! நீ இதை உறுதியாக நம்பு! யாராவது என்னிடம் பணமில்லை என்ற விஷயத்தை அவருக்கு சொல்லியிருப்பார்கள் அம்மா!" என்றாள் பெர்த்.

ஜோஸ் திருப்தி அடைந்து விடவில்லை. அவள் கூச்சலிட்டாள்.

"ஏன் உன் மாமன் உனக்கு கொடுக்கும் வரதட்சனை என்ன ஆவது? எல்லோருக்கும் இந்த விஷயம் தெரியுமே! காரணம் நிச்சயமாக, இதாக இருக்க முடியாது! அவன் எவ்வளவு சீக்கிரம் பின் வாங்கி விட்டான்? நாட்டியமாடிக் கொண்டிருந்த போதே நீ அவனுடன் "இன்னொரு அறைக்குள் போனாயா?"

பெர்த் குழம்பிப் போய் விட்டாள்.

"ஆமாம் அம்மா! நாங்கள் தனித்துதான் இருந்தோம். அப்போது அவர் ஏதேதோ சில்லறை விஷயங்கள் செய்ய ஆரம்பித்து விட்டாரம்மா. எனக்கு அது மிகவும் அசிங்கமாகத் தெரிந்தது. என்னை அவர் முரட்டுத் தனமாக பிடித்திழுத்து முத்தமிட முயன்றபோது, நான் அவரை ஒரு சோபாவின் மீது தள்ளி விட்டேன்........."

பெர்த் தன் கதையை சொல்லிக் கொண்டு வருகையில், தாய் ஜோஸ் கோபத்தோடு குறுக்கிட்டாள்.

"ஏண்டி அவனை சோபாவின் மீது தள்ளி விட்டாய்?"

"அவர் என்னை பலாத்காரமாக பிடித்தணைத்தாரே......!"

"அதனால் என்னடி வந்தது? அணைத்தது தவறில்லையே! அதற்கு நீ ஈடு கொடுத்திருந்தால்......இப்போது எவ்வளவு விஷயமாகி யிருக்கும்? உனக்கு யார்தான் இம்மாதிரியெல்லாம் முரட்டுத் தனமாக இருக்க சொல்லிக் கொடுத்தார்களோ!"

பெர்த்தின் முகம் சிவந்து போய்விட்டது. அவள் கண்களில் நீர். அவள் மேலும் கலங்கிப்போய்விட்டாள் தாயாரின் இந்த மிரட்டல்களினால்!

(தொடரும்)

ஆனந்த பவனத்தில் கரையான்கள் குடி புகுந்தன!

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சூதிருக்குன்னு" எங்க ஊர் டீ கடைக்காரர் சொன்னார்.

நேப்பாளத்திலிருந்து அரிசி வாங்கினீர்களாம். அதிலே முப்பத்தாறு லட்சம் நஷ்டம், இந்தோனேஷ்யாவிலே தூது வரும் அதிகாரிகளும் சேர்ந்து பொருளாதார மாற்றங்களில் கமிஷன் அடிச்சுட்டதாகவும், அவங்களையெல்லாம் நீங்க தண்டிச்சதாகவும் பேப்பர்லே தெரியுது.

இந்த மாதிரி ஊழல் ஒண்ணு ரெண்டு இல்லே; ஆயிரக் கணக்கா நடைபெறுகிறது என்று திராவிட இயக்கத்தார் எடுத்து சொல்லி,காங்கிரஸ்ஆட்சி, ஊழல் மலிந்த ஆட்சி, உதவாக்கரைகள் நடத்தும் ஆட்சி, உருப்படியான திட்டமில்லா ஆட்சி, நம்ம உயர்வுக்கு வழி செய்யாத ஆட்சி, உத்தமர்களெல்லாம் ஒரு காலத்தில் இருந்த கட்சியின் பொல்லாத ஆட்சி, என்று அடுக்கடுக்காக கூறுகிறார்கள். அவங்க சொல்லறதும் உண்மை பின்னுதான் தெரியுது. திராவிட கட்சிக்காரர்கள் காங்கிரஸ்மீது சுமத்தும் குற்றச் சாட்டுக்களை இங்கே உள்ள எந்த காங்கிரஸ் தலைவர்களும், பத்திரிகையும் மறுப்பதாகக் காணோம். அவர்கள் பேச்சைக் கேட்டு, காந்தி படத்தை காலையிலும், மாலையிலும் கும்பிடும எனக்கே காங்கிரஸ்மீது பக்தி குறைந்து வருகிறது. அதனால் தான் உறுப்பினர் எண்ணிக்கை காங்கிரசிலே மலையிலே யிருந்து தண்ணீர் கீழ விழுகிற மாதிரி ஒரே வேகத்திலே, ஒரே வருஷத்திலே 27 லட்சம் போயிருக்கிறது. ஐயய்யோ !! கேட்கவே பரிதாபமாக இருக்கே !

இன்னும் ஒன்று, அதையும் இப்போதே எழுதி விடுகிறேன்.

எதிர்க்கட்சிக்காரர்கள் தான் காங்கிரஸ் கட்சி பதவி வேட்டைக்காரர்கள் கட்சி, பண முதலைக்கு வால் பிடிக்கும் கட்சி பண்பு கெட்டவர்களுக்கு இடம் அளிக்கும் கட்சி என்று கூறுகிறார்கள் என்றால் இங்கே உள்ள காங்கிரஸ் தலைவர்களும் அதுமாதிரித் தான் நடந்துகொள்கிறார்கள்.

உங்களுக்கு மறந்து போயிருக்காது என்று எண்ணுகிறேன், ஆச்சாரியார் ஆட்சியிலே இருந்தபோது கல்வித் திட்டம் ஒன்றைக் கொண்டுவந்து காங்கிரசுக்கு இருந்த மதிப்பை பாழாக்கி, காங்கிரசிலே இருக்கிற சிலரை அனுமார்கள், விபீஷணர்கள் என்று வர்ணித்து பலருடைய எதிர்ப்பை சம்பாதித்தார். தூத்துக்குடி, கல்லக்குடி என்கிற இடங்களில் துப்பாக்கி பிரயோகம் பண்ணி, பதினேறு பேரைக் கொன்று குவித்தார் இப்போ அவர் போய் விட்டார். அவாதான் மாணிக்கவேலரை சோத்தார் என்றால் கனம் காமராசர் உழைப்பாளர் கட்சியையே அபேஸ் பண்ணியிருக்கிறார். இந்த உழைப்பாளர் கட்சிக்காரர் களெல்லாம், போன வருஷம் காங்கிரசை திட்டியதைக் கேட்டால் இப்போதுகூட எங்களுக்கு கண்ணில் தீ பறக்கிறது. பதவி வேட்டையாடும் அவர்களை காங்கிரசிலே சேர்த்துக் கொண்டு என் போன்ற உண்மை காங்கிரஸ் ஊழியர்களை எல்லாம் ஜில்லா போர்டு தேர்தலில் இந்த கட்சி மாறிகளை ஆதரித்து வேலை செய்யுமாறு கூறுகிறார்கள்.

லால்குடியிலே ராஜா சிதம்பரம்னு ஒருவர் ; அவர் நேற்று வரைக்கும், திராவிட கட்சியைச் சேர்ந்தவர். காங்கிரசை எதிர்த்து தேர்தலில் வெற்றி பெற்று இப்போது சட்டசபையிலே இருக்கிறார். இப்போ ஜில்லா போர்டு தேர்தலிலே காங்கிரஸ் டிக்கட் கொடுத்திருக்கிறார்கள்.

உண்மையைச் சொல்லவேண்டுமானால் இப்போது தமிழ் நாட்டிலே கையை நீட்டுவோருக்கு எல்லாம் காங்கிரஸ் டிக்கட் கொடுக்கிறார்கள். அவர் முகத்தைப் பார்ப்பதே இல்லை. கண்டவன் எல்லாம் நுழையும் சத்திரமாகி விட்டது காங்கிரஸ் இயக்கம் தமிழ் நாட்டிலே!

புதிசா யார் காங்கிரசிலே சேர்கிறார்கள் என்று பார்த்து அவர்களைத் தான் தேர்தலுக்கு நிறுத்துகிறார்கள். மந்திரியாக நியமிக்கிறார்கள். பழைய காங்கிரஸ்காரர்கள் எல்லாம் மனம் உடைந்து போய் கன்னத்தில் கை வைத்துக் கொண்டு உட்கார்ந்திருக்கும் போது, புதிதாக காங்கிரசில் தேர்தலுக்காக சேர்ந்திருப்பவர் பளபளப்பான காரிலே வந்து, இரங்கி கன்னத்திலே கை வைத்து கவலையுடன் இருப்பவரின் முதுகிலே தட்டி "பயப்படாதிங்க சார் நம்ப எப்படியும் ஜயிக்கலாம்" என்று ஆறுதல் சொல்லுகிறார். நிலமை இங்கே இப்படி மாறிவிட்டது. என் போன்றவர்கள் வெளியிலே தலைகாட்ட முடியவில்லை. இதனால் பல காங்கிரஸ்காரர்கள் மனம் உடைந்து காங்கிரசை விட்டு வேதனையுடன் வெளியேறுகிறார்கள். அப்படி வெளியேறுகிறவர்களில் பலர் திராவிடர்கள் கட்சியிலே சேர்ந்து விடுகிறார்கள். காங்கிரசில் நல்லவர் அல்லாதார் குகையாகிறது ஆனந்த பவனத்தில் கரையான்கள் குடி புகுந்தது போன்ற நிலைமை காணப்படுகிறது.

தமிழ் நாட்டிலே இப்படி காங்கிரசின் மதிப்புக்கு அவக்கேடு ஏற்பட்டுவிட்டது. ஏற்படுமாறு நடந்து கொள்கிறார்கள்.

தமிழ் நாட்டிலேயே இப்படி என்றால் உங்க பக்கத்திலே இன்னும் நிலமை மோசமாகவே இருக்குமென்று எண்ணுகிறேன். வடநாட்டுகாரர்கள் சூழ்ச்சியில் வல்லவர்கள் என்றும், ஆரியர்களுக்கு அடுத்தபடி அவர்கள்தான் என்றும இங்கே எதிர்க்கட்சிக்காரர்கள் சொல்கிறார்கள்.

இப்படிபட்ட நிலைமைகளினால் தான் காங்கிரஸ் கட்சியிலே திடீரென்று ஒரு வருஷத்தில் 27 லட்சம் உறுப்பினர்கள் குறைந்துபோய் விட்டார்கள் என்று எண்ணுகிறேன்.

இப்போது சுதந்திரம் வாங்கிக் கொடுத்த கட்சியில் உறுப்பினர்கள் அதிகமாக வேண்டும். மேலும் நீங்கள் ஐந்தாண்டு திட்டம் என்று வகுத்து பிரமாதமான திட்டங்களை யெல்லாம் நிறைவேற்றி வருகிறீர்கள். வடக்கே அந்த திட்டங்கள் நிறைவேறுவதை நான் இந்தியன் நியூஸ் படத்தில் பார்க்கிறேன்.

அமெரிக்காவிலிருந்து கோடிக் கணக்கிலே உதவி. போதாக்குறைக்கு இப்போ ரஷ்யாவிலிருந்து இரும்பு தொழிற்சாலை கட்டிக் கொடுக்க போகிறார்கள் என்று தெரிகிறது.

இவ்வளவிற்கும் பின்னர் பயன் என்னவென்று கேட்டால் காங்கிரஸில் உறுப்பினர்களின் எண்ணிக்கை 27 லட்சம் குறைந்து போயிற்று என்கிறீர்கள் காங்கிரஸ் பத்திரிக்கைகளிலேவெளியாகி யிருக்கிறது.

இது மிகவும் நமக்கெல்லாம் வேதனை தரும் புள்ளி விபரம் என்று கருதுகிறேன். உடனே தாங்கள் ஆவன செய்து உறுப்பினர்களை அதிகப் படுத்துங்கள் பம்பாயிலே வெள்ளத்தால் பாதிக்கப் பட்ட மக்களுக்கு நீதி திரட்ட சினிமா நடிகர்கள் ஊர்வலமாகச் சென்றார்களாம் காங்கிரசுக்கு உறுப்பினர்களைச் சேர்க்க அந்த முறையைக் கடைப் பிடிக்கலாம் என்று கருதுகிறேன்.

தயராகுங்கள்;
வீடுதேடி வருகிறார்கள் !

வெள்ளித்திரையின் சிலை போன்ற நடிகர்கள்!

காங்கிரசில் உறுப்பினர் ஆகுங்கள் !

நாட்டு மக்களின் கவலை போக உதவுங்கள் !

நட்சத்திரங்களின் பவனி ;
வெள்ளை யனை விரட்டிய கட்சிக்கு உறுப்பினர் சேர்க்க !
அருமையான சந்தர்ப்பம் !

இப்படி தேசியப் பத்திரிகைகளில் விளம்பரம் செய்துநாடு பூராவும் சினிமா வானில் உள்ள சிறந்த நடிகர்களை அனுப்பி காங்கிரசுக்கு உறுப்பினர் சேர்கலாம். எதிக்கட்சியைத் சேர்ந்த நடிகர்கள் வராவிட்டால் போகட்டும். காங்கிரசை ஆதரிக்கும் நடிகர்கள் வந்தால் போதும்.

திடீரென்று குறைந்துபோன 27 லட்சம் உருப்பினர்களை ஒரே நாளில் சேர்த்து விடலாம் யார் வேண்டுமானால் சேரட்டுமே. இப்போதுதான் தரம். தகுதி நாணயம் இவைஎதும்பாக்காது காங்கிரசில் சேர்த்துக் கொள்கிறார்களே ! தங்கள் அன்பன்

ஒரு காந்திபக்தன்

—சிவம்

நிலைமை மாறிவிட்டது இமயம் கரைகிறது!

முத்தோர் மொழி

1. "அகில உலகையும் படைத்தவன் ஆண்டவன் என்றால், அவனைப்படைத்தது யார்? அவன் தானாகத் தோன்றியவன் என்றால் உலகம் ஏன் தானாகத்தோன்றி இருக்கக் கூடாது"
ராகுல சாங்கிருத்தியாயன்

2. "நான் சிலவேளைகளில் எண்ணுவதுண்டு ; இந்த ரோஜா மலருக்கு இவ்வளவு சிகப்பு நிறம் வரக் காரணம், இந்த இடத்தில் புதையுண்டிருக்கும் மன்னர்களின் ரத்தம்தான் என்று"
உமர்கயாம்

3. இந்த உலகையே என் காலடியில் வைப்பதானாலும் நான் என் கொள்கைகளை விட்டுக் கொடுக்க மாட்டேன்—
லார்டு பைரன்

4. நான் கல்லுக்கும் மண்ணிற்கும் பிறக்கவில்லை. ஒரு பெண்ணிற்குத் தான் பிறந்தேன்.
ஓமர்

கண்ணதாசன்

அக்டோபர் நிகழ்ச்சிகள்

அக்டோபர்	10	சூளை
,,	15	கொல்லக் கோம்பை (நீலகிரி)
,,	16	பொள்ளாச்சி
,,	17	திருப்பூர்
,,	23	திருப்பாலைவனம்
,,	24	பல்லாவரம் (நாடகம்)
,,	25	நுங்கம்பாக்கம் (குறள் விழா)
,,	27	பட்டாபிராமம்
,,	29	லெப்பக்குடி
,,	31	இராயப்பேட்டை (தி. இ. மு. க.).

பெரும்பயணம்

கண்ணதாசன்

குன்றாத மனவளத்தான் ; கவிதைச்செல்வன் :
குறைவுபடா எழுத்தாளன் : அறிவுத் தோட்டம்
அன்றுடம் 'விடுதலை'யில் வரைந்த சொல்லால்
அறிவுலகப்பாதையிலோர் புதுமை கண்டோன் ;
திண்டோளும், மாங்கனியை வகிர்ந்தாற்போல
சிவந்து வரும் புன்னகையும், வாலிபர் முன்
நின்றாடும் காதலிபோல் தவழும் பேச்சும்
நிறைவேந்தன் "துரை" என்றார் ; "அண்ணு" என்றார் !

அதுவரையிற் படித்தோர்கள் நிறைந்ததில்லை ;
அழகு மொழி இழை கருத்துக் கேட்டதில்லை.
மதுமலரை வண்டினங்கள் தேடி ஓடும்
வயக் காட்சி அவ்வளவாய்க் கண்டதில்லை.
சதிகாரக் கும்பலுக்கு நயமாய்ச் சூடு;
தருகின்ற நாகரிகம் வளர்ந்ததில்லை
எதிர்ப்பாட்டுப் பாடிடினும், பகைவர்கூட
இளகி விடும்படிப் பாடும் திறனுமில்லை !

சுயமரியாதை இயக்கம் நீதிக் கட்சி
'சூடாக'ப் பணி செய்த துண்மை ; ஆனால்
நயமாகப் பேசி மனங் கவரும் வண்ணம்
நடந்ததெலாம் அறிஞரிவர் வந்த பின்பே !
பயந்தேக்கி மறைந்திருந்த பார்ப்பார்கூடப்
பயமின்றிக் கூட்டத்திற் கலக்குமாறு,
சுயமான கற்பனையிற் சொல் குழைத்துச்
சொக்கவைத்தார் எனக்கூறின் மிகக் குறைவு !

"அடடாவோ" யாரப்பா அடுக்குச் சொல்லோன் !
அண்ணுத்துரையாமே! காஞ்சியாமே !!!
படிப்பாளி—எம். ஏ. யாம், பலவுங்கற்றுப்
பழக்கொத்தே போற்சொற்கள் உதிர்க்கின்றானே !
கடனுகச் சிவேனும் தந்தாறுனல்
கவிபாடி நான் புலவன் ஆவேனப்பா !
மடைபோலப் பேசுகிருன்; பகவான்நந்த
வரமப்பா! "அன்பர் எதிர்கட்சியாளர் !

"சாஸ்திரிவாள்! தெரியுமோ? சூத்திரன்தான்.
தமிழினிலே அழகாகப் பேசுறான் ஓய்!
நாஸ்திகம்தான் பேசுகிருன்; என்றாலும் ஓய் !
நன்னுவே பேசுகிருன்! என்னங்காணும்;
ஆஸ்திகத்தை அவன்தாக்கும் முறையைப் பார்த்தால்
ஆபத்துத்தான் காணும் எதிர்காலத்தில் !
வாஸ்தவத்தில் அவன் நல்ல மூளைக்காரன் !
மகதேவன் அவதாரம் !" என்பார் ஐயர் !

நம் அண்ணு ; தளபதியார் ! நலிந்துபோன
நாட்டிற்கு வலிவூட்ட வந்த வீரன் !
தம் ஒருவர் பலத்தாலே தமிழர் சாதித்
தாய் நாட்டை வளமாக்க வல்லோன் !" இன்னும்
"இட்மாகிலத்திற்கு எழுச்சியூட்டி
ஈடற்றவல்லாட்சி ஆக்கவல்லோன் !
எம் மேதை ; உடன் பிறக்கவில்லையேனும்
எம் அண்ணு" என்பார் நற்றிரு விடத்தார் !

இப்படியே பலபேரும் புகழ்ந்து ஏத்த,
ஈக்கள் விழும் பலாக்கனியாய் வளர்ந்த அண்ணல்
"முப்புரியார் ஆச்சாரியாரின் ஆட்சி,
முடிவு பெறும், இந்தியினைத் திணித்தால் !" என்று
சொற்பலத்தை வாளாக்கிப் போர்க்களத்தில்
தொகை தொகையாய்ப் பலபேரைப் பின்னழைத்து
முற்படியில் தான்நின்றார் ! அந்தக்காட்சி
முன்கால வரலாறும் காணுக்காட்சி !

வீரர்பலர் சரித்தத்தில் உண்டு ; ஆனால்
விவேகமுடன் விதரணையும் சேர்ந்தத்
தீரர் இவர் போல ஒரு செம்மல் இந்து வாய்த்த
திரு நாட்டில், உலகத்தின் மறுபாகத்தில்
யாருமிலை ! உண்டென்று சொல்வார் உண்டேல்
அறைகூவி அழைக்கின்றேன், எடுத்துச் சொல்வீர் !
சேரவரும் பாசத்தாற் சொன்னேனில்லை !
சிந்தித்துச் சிந்தித்து முடிவே சொன்னேன் !

'இந்தி எதிர்ப்'பென்கின்ற போர்க்களத்தில்
இமைக்காது பணி செய்தார் அறிஞர் அண்ணு !
தந்தை பெரியாரோடும், தாய்மாரோடும்
சமர்க் களத்தில் நேராக ஈடுபட்டார் !
"சந்தியிலே ஆடுகின்ருள் இந்தி நங்கை,
சதிகாரப் பார்ப்பனர்கள் தாளத்தோடு !
எந்தையரே ! தாய்க்குலமே ! விரட்ட வாரீர் !"
என்றழைத்துப் பலரோடும் சிறை புகுந்தார் !

"ஆள்வதெனில் நாம் ஆள்வோம்; இல்லையென்றால்
ஆங்கிலரே ஆள்வர் !" எனும் மமதை பேசி
தேள்க்குலத்தின் மூத்தபிதா, திமிரே வாழ்வாய்த்
திராவிடரை இகழ்கின்றார் ! அந்நேரத்தில்
"மாள்வதற்கும் அஞ்சுகிலோம்" எனப்பண்பாடி
வள நாட்டார் சிறைக்கோட்டம் புக்கார் ! ஆட்சி
வீழ்வதற்குத் தொடங்கிவிட்ட நிலையறிந்தும்
விராப்பை விடவில்லை ஆட்சியாளர் !

சட்டசபைக் கேள்வியிலே பன்னீர் செல்வம்
சரமாரியாய்க் கேள்வி கேட்கின்றார் ! தன்
" கெட்ட செவிதனைத் திருப்பிக்கேட்டேன் " என்று
திறுக்கு மொழி கூறினார் முதலமைச்சர் !
"கெட்ட செவி என்பக்கம் திருப்புதிரோ !
கீழ்மனத்துப் பெரியவரே ! உமது வாழ்வும்
கெட்டொழிந்தும் காலம் வரும் !" என்று சீறிக்
கிளம்பினர் காண் அடலேறு பன்னீர்ச் செல்வம் !

"இந்தியினை எதிர்ப்பவர் யார் ? ஈ. வே. ராவும்
இன்னுமொரு பாரதியும் ! இரண்டே பேர்தான் !"
என்று சொலும் ஆச்சாரியாரைப் பார்த்து
எழுந்திருந்து, சிம்மம்போல் எதிரே நின்று
"நன்று சொனீர் ! பெரியவரே" அதிலேகூட
நல்ல 'மெஜாரிட்டி'யினை நான் காண்கின்றேன்.
இன்றதனை எதிர்ப்பவர்கள் இருவர் என்றால்
இந்தி கொண்டு வந்தவர் நீர் ஒருவரேதான் !"

என்றனர் நம் தனிப்பெருமைக்குரிய அண்ணல்
இறப்புலகிற் கலந்துவிட்ட பன்னீர் செல்வம் !
தின்று விடுவார்போல அமைச்சர்பார்த்தார் ;
திருகிவிட்ட மீசையினை அங்கே கண்டார்
கொன்றழிக்கும் வேங்கையிடம் வெள்ளாடொன்று
குறுநகைத்தாற்போல நகைக்குணத்தார் - அந்த
மன்றினிலே நகைக்கின்றார் ; அதனைப்பார்த்து
மனதுக்குள் நகைக்கின்றார் பன்னீர் செல்வம் !

பெரியாரைப் பெல்லாரிச் சிறைக்கனுப்பிப்
பெண் மக்கள் பலபேரைக் கொடுமை செய்து,
அறியாத சிசுக்களையும் உடனனுப்பி
ஆர்ப்பாட்டம் செய்த ஆச்சாரியாரைச்
சருகாகக் குறையிலே பறக்கவைத்துச்
சட்டசபைக்குள்ளிருந்து போர் முழக்கி,
உருமாற உழைத்திட்ட பன்னீர் செல்வம்
உண்மையில் நம் வணக்கத்திற்குரியாராவர் !

(தொடரும்)

கட்டபொம்மன்

சிலம்பின் செல்வன்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

கட்டபொம்மன்: ஆம் உடலையும் கொடுப்பேன்...உயிரையும் ஈவேன் !

(பின்னணி) மானமொன்றே நல்வாழ்வெனக் கொண்டு வாழ்ந்தவன் மறவேந்தர் பூனைகளல்லர்; அவர் வழி வந்தோர் புலி நிகர் தமிழ் மாந்தர்,

கட்டபொம்மன்: புலி நிகர் தமிழன்தான் பூனையல்ல அவன்.

(பின்னணி) தாயின்மேலாணை......தந்தைமேலாணை...தமிழக மேலாணை...தூயவென் தமிழ்மேல் ஆணையிட்டேன் ; நான் தோழரே உரைக்கின்றேன்.

கட்டபொம்மன்: ஆணையிட்டுத்தான் கூறுகின்றேன். சமாதானம் என்றைக்கும் இல்லை, மாண்டு ஒழியும் உயிருக்கு அஞ்சி மானத்தையிழந்து மண்டியிட்டு ஒரு நாளும் சமாதானம் பேசச் செல்லமாட்டான் இந்த வீரபாண்டியன். (தானாதிபதி வருகின்றார்.)

தானாதிபதி: அரசே வணங்குகின்றேன். சமாதானம் நல்லதுதான்.

கட்டபொம்மன்: என்ன சொன்னீர். சமாதானம் நல்லதா ?

தானாதிபதி: ஆம் பகைவர் தம் மார்பிலே நம் படைகள் பாயும்போது—இரத்த ஆறுகள் எங்கணும் பரந்தோடும்போது—அவற்றிலே இளைஞர்களின் தலைகளை அலைமோதிச்செல்லும்போது பெண்டு பிள்ளைகளின் பேரிரைச்சல் பிணக்குவியல்களிடையே கேட்கும்போது—

கட்டபொம்மன்: தமிழ்நாட்டு மண்ணில் பிறந்த ஒரு தலை உயிரோடிருக்கும்வரை தன்மானம் பறிபோகாது என்பதைச் கண்டு வெற்றிச்செல்வி கொட்டுவாள் முரசை. வீழ்ச்சியுற்ற தமிழகம் எழுச்சிபெறும். வேகின்ற நெஞ்சம் வேதுபெற்று வேதனை அடங்கும்.

தானாதிபதி: இல்லை. தாய் நாட்டானைக்கொன்று தன்மானம் பெறப்பார்க்கின்றானே என்று தவிப்பாள் தமிழ்த்தாய்.

கட்டபொம்மன்; அப்படியென்றால்......

தானாதிபதி; நம் எதிரிகள் யார்? வெள்ளையினத்தார். நாம் எதிர்க்க எண்ணியது யாரை? கொள்ளைக்கூட்டத்தாரை. நாம் போரிடுவது யாருடன்? செந்தமிழ் நாட்டானுடன்...இல்லை .. இந்த நாட்டானுடன். அன்னியனையே அழிக்க எண்ணிய நாம்—தன்னினத்தானையே தமிழனை அழிக்கத்துணிந்து விட்டோமே. இனத்தால் இனத்தை அழிக்க எண்ணிய வெள்ளையர் எக்காளமிட்டுக்கொண்டிருக்க நாம் ஏமாந்த சோணகிரிகளாகிவிட்டோம் !—இந்த நிலையில் நம் இனத்தைக் காக்க ஒரே ஒரு வழி—அதுதான் சமாதானம்...

கட்டபொம்மன்: சிந்திக்கத் தக்கதுதான்...

தானாதிபதி; சிந்திப்பதென்ன ? மாப்படையொன்றுடன் மாப்பிள்ளைவன்னியரைத் தூதாக அனுப்பலாம்,

கட்டபொம்மன்: ஆமாம்! முடிந்தால் சமாதானம்...தொடர்ந்தால் போர்...போரேதான்...

தானாதிபதி: தூது செல்லட்டும் மாப்பிள்ளைவன்னியர் ..

காட்சி 26

[பானர்மென் கூடாரத்தின் தூதராக வந்த மாப்பிள்ளைவன்னியர் கைது செய்யப்படுகின்றார் பானர்மெனால்]

பானர்மென்: மாப்பிள்ளைவன்னியரே ! நீவிர் கைதியாக்கப்பட்டிருக்கின்றீர் !

மாப்பிள்ளைவன்னியர்: (சிரித்தல்) கைகளில் விலங்கு மாட்டிய பிறகு நான் கைதி என்பதை அறிவிக்கின்றார் கனவான்.

பானர்மென்: பிடித்து இழுத்துவா அந்தப் பேடிப்பயலை... சிறைக்குச் செல்வதற்குமுன்னர் சிந்து பாடுகின்றான்...அடிமைப் பயலுக்கு ஆண்மை வேறு...!

மாப்பிள்ளைவன்னியர்: யாரைப்பார்த்து பேசுகின்றாய் ? ஆண்மை எதுவென்று தெரியுமா ? இந்த ஆங்கில ஏகாதிபத்தியத்திற்கு ! வீரம் எதுவென்று தெரியுமா ? இந்த வெள்ளை இனத்தாருக்கு . (சிரிக்கின்றான்)

பானர்மென்: பஞ்சையே ! வார்த்தையில் மிஞ்சாதே ! அஞ்சாது பேசும் உனக்கு எங்களைப்பற்றி என்ன தெரியும் ?.

மாப்பிள்ளைவன்னியர்: தெரியாமல் என்ன ? வஞ்சகம் உங்கள் வாழ்க்கை—தந்திரம் உங்கள் தாரம்—சூழ்ச்சி உங்கள் சோதரன்—சொல்லப்போனால் சுயநலம் உங்கள் சுதந்திரப் புத்திரர்கள்...

பானர்மென்: துடுக்கை அடக்கு! துள்ளிக் குதித்து முள்ளில் விழாதே...

மாப்பிள்ளைவன்னியர்: துடுக்கை அடக்குவதென்ன...? துள்ளிக் குதிப்பதென்ன ? தூதனைச் சொல்ல வந்தேன்—தொண்டனாகப்பணியாற்ற வந்தேன் ஆயிதமற்றிருந்த என்னை அழைத்தீர்கள் ஆகட்டும் என்றேன் ! அந்தரங்கம் என்றீர் ஆம் ! என்றேன் இதிலென்ன விசித்திரம்...தூதரைச் துச்சமாகப் பேசல்—கைகளுக்கு விலங்கிடல்—தமிழ் நாட்டின் ஏட்டிலே வேட்டை நாய்களாம் வெள்ளையரால் தீட்டவேண்டிய புதிய பாடம்...

லூஷிங்டன்: பானர்மென் ! இவனை என்முன் நிறுத்தாதே...! நாயை இழுத்துச்செல்...நரிகட்கு உணவாக்கு......

மாப்பிள்ளைவன்னியர்: சிங்கத் தமிழ் நாட்டின் கீர்த்திபெற்ற வீரர்களே ! பங்கமுங்கள் தாய்க்கென்றால் பார்ப்பீரோ ? பாகோ உயிர் எங்கள் தமிழ்குலமே ஏனழிந்தாய் ? எனக்கேட்க உங்களிலே யாருக்கும் உயிர்த்துடிப்பே இல்லையோ ? நாட்டு மறவர் கூட்டமே ! வேட்டெழாது வேடிக்கையா பார்க்கின்றாய் !

[மாப்பிள்ளைவன்னியர் இழுத்துச் செல்லப்படுகின்றார் லூஷிங்டனும் பானர்மெனும் அமர்ந்திருக்கின்றனர். பின்னணியில் போர் ஆரவாரம்,]

பானர்மென்: அழைப்பு விடுத்தோம் ! அவமதித்து விட்டான். தூதரை அனுப்பினோம், துச்சமாக கருதிவிட்டான்... மாப்பிள்ளைவன்னியரை மாப்படையுடன் அனுப்பி இருக்கின்றான், எல்லோரும் நம் பாதங்களை ஏத்தித் துதிக்கும்போது —இவன் மட்டும் நம்மை எதிர்க்கின்றான். காரணம்...?

லூஷிங்டன்: படைபலம் இருக்கவேண்டும் — பக்கத்துணை இருக்க வேண்டும்—பாதுகாப்பு இருக்கவேண்டும்—

பானர்மென்: ஆமாம் ! இல்லாவிட்டால் பாஞ்சாலங்குறிச்சியான் பயந்தோடி நம் பாதம் பணிய வரமாட்டானா ? பக்கபலம் ஆம் ! பக்கபலம்தான்...காரணம்...?

[படைத்தலைவன் காலின்ஸ் துரை வருகின்றான்]

காலின்ஸ்: இல்லை... இல்லவே இல்லை . பக்கபலம் இல்லவே இல்லை...பக்கபலமாக விருந்த படைஞரெல்லாம் திருச்செந்தூர் திருவிழாவிலே...

திருப்புக்காட்சி 27

காவடியாட்டம்—கரக ஆட்டம் மயிலாட்டம் இவற்றை ஊமத்துரை வெள்ளையத்தேவன் முதலியோர் கண்டு களிக்கின்றனர்—திருச்செந்தூர் முருகன் ஊர்வலம் வருகின்றான்...திருநீற்றுக்கூட்டம் காவடிப்பாட்டுப்பாடுகிறது—தீந்தமிழ்க்கூட்டம் தெம்பாங்குப்பாடி மகிழ்கின்றது,

காட்சி 28

(பானர்மென் காலின்ஸ்—லூஷிங்டன்)

பானர்மென்: பொருத்தமான நேரம் புறப்படட்டும் நமது படைஞர்—பொங்கட்டும் குருதியாறு — பஞ்சாய்ப்பறக்கட்டும் பாஞ்சாலங்குறிச்சி—அழியட்டும் பகைவர்—

லூஷிங்டன்: அதற்கு முன்னர்...

காலின்ஸ்: அதற்கு முன்னர்...

லூஷிங்டன்: இராமலிங்க முதலியார் இறுதியாகத் தூது சென்று உறுதி பெற்று வரட்டும்...கருதிப் பணிந்தால் வாழட்டும் இன்றேல் உயிர்க்கு இறுதி தேடட்டும்...

பானர்மென்: அதற்கு முன்னர்...ஆற்றூரிலே தானாதிபதி—அவர் கைகள் விலங்குகளைக் காணட்டும்.

காலின்ஸ்: ஆமாம் ! ஆற்றூர் தானாதிபதி...

(தொடரும்)

மேட்டுக் குடியிற் பிறந்தான்; கேட்டுக் குடிக்கே உழைத்தான்!

‘நம்மூர்’ கம்யூனிஸ்ட்டுகள் போல் அல்ல; இவன் அறிவாளி!

ஐரோப்பா கண்டத்தில் பத்தொன்பதாவது நூற்றாண்டின் இடைக்காலத்தில் கொடுமை கோலோச்சிற்று, அநீதி அரசோச்சிற்று, அறியாமை இருள் கவ்வியிருந்தது; அக்கண்டத்தை மன்னர் பரம்பரையினர், மாளிகைவாசிகள், மடாதிபதிகள், இவர்களே செல்வாக்கேந்தியிருந்தனர். பஞ்சைகளின் பரிதவிப்பு இவர்களுக்கு பாவசத்தை தந்தது; தொழிலாளர்களின் துடிதுடிப்பு வேடிக்கையாக இருந்தது, இந்த வீணர்களுக்கு. முதலாளிகளோ தொழிலாளர்களை நசுக்குவதில் மும்மரமாக ஈடுபட்டனர். கொடுமைகள் பல விளைவித்தனர். பஞ்சைகளை துச்சமென மதித்து வேலை ஏவினர்.

“தங்கள் இழிநிலையை அகற்றுவது எப்படி!” என்று தவித்துக் கொண்டிருந்தோருக்கு, எங்கெல்ஸன் கலங்கரை விளக்காக காட்சி தந்தான்.

எங்கெல்ஸன் ரைன்லாந்தில் பார்மென் என்ற ஊரில் செல்வமாளிகைச் சீமான் ஒருவனின் புதல்வனாக 1820ம் ஆண்டு நவம்பர் திங்கள் இருபதாம் நாள் பிறந்தான். பிறந்தவுடன் தங்கத்தாலான தொட்டியில் தான் கிடத்தப்பட்டான். தாலாட்டத் தாதியர், உணவு ஊட்டப் பலர், விளையாட்டுக்காட்ட வேறு சிலர், இப்பேற்பட்ட செல்வநிலையில்தான் வளர்ந்தான். இவன் தந்தையோ கொடிய குணக்களைக் கொண்டவன் ஆண்டவனை சதா இதயமேற்கொண்டு கொடுமைகள் எவ்வளவு செய்யினும் குந்தகம் ஏற்படாது பணத்தின் பளு அதிகரித்தால் போதும், அதற்காக பாவங்கள் பல செய்யினும் பாதகம் நிகழாது. ஆனால் ஆண்டவனின் நாமத்தை மட்டும் உச்சரிக்க மறத்தலாகாது என்ற கருத்துகளைக் கொண்டு பாவமூட்டைகளையும், பணமூட்டைகளையும் சேகரித்து வைத்திருந்தான். தன்னைப் போலவே ஒரு சுயேச்சாதிகாரியாக எங்கெல்ஸை ஆக்க வேண்டுமென்றும் கருதினான். எங்கெல்ஸனுக்கு இளம் வயதிலேயே மதபோதனையென்னும் மதுவை ஊட்டினான்; ஆனால் அவைகளை வாந்தியெடுத்தான் எங்கெல்ஸன் மதத்தின் மீது மக்கள் கொண்டிருக்கும் மூடநம்பிக்கையும் அதனால் அவர்களுக்கு விளையும் கேடுகளையும் மதத்தின் பெயரால் மதவாதிகள் மட்டும் உல்லாசத்தில் உழன்று கொண்டிருப்பதையும் கண்ட எங்கெல்ஸனது பிஞ்சு நெஞ்சிலே வேசனை ஏற்பட்டது.

உழைப்போர்கள் அரைத் துண்டு ரொட்டி கூடக்கிடைக்காது ஒட்டிய வயிற்றுடன் உலவிவந்தார்கள். உதிரம் கொட்டத்தான் உழைத்தார்கள் எனினும் இந்தத் துயர் தருநிலை அவர்கள் கொட்டும் உதிரத்திலே ஓடம் செலுத்தினர் உல்லாச புரியினர். இந்த நிலையைக் கண்ட எங்கெல்ஸன் ஏழையோர் ஏற்றத்திற்கு வழி வகுக்க வேண்டுமென திட்டமிட்டான். தன்னுடைய கருத்துக்களை பிரச்சாரத்தின் மூலமாகவும், பத்திரிக்கை வாயிலாகவும் வெளியிட்டான். தனயனின் இச்செய்கை தந்தைக்கு வெறுப்பூட்டிற்று. அவனது மனதை மாற்ற மார்க்கம் தேட முயன்றான். மான்செஸ்டரில் ஆலையுண்டு அவனுக்கு அங்கே மகனையனுப்பி நிர்வாகத்தை ஒப்படைத்தால் செல்வந்தர்களுக்குண்டான செறுக்கு வந்துவிடுமென கோட்டை கட்டினான். எங்கெல்ஸனும் தந்தையின் விருப்பப்படி கல்லூரிப் படிப்பை முடித்துவிட்டு மான்செஸ்டர் பயணமானான்.

மான்செஸ்டர் இங்கிலாந்து தேசத்திலுள்ள ஒரு நகரம், ஆலைகள் பல உண்டு அங்கே பல நாட்டுச் சீமான்கள் ஆலைகளின் அதிபர்களாகத் திகழ்ந்தார்கள்; நூல் உற்பத்திக்கு புகழ் பெற்ற பூமி அது; உப்பரிகையிலே உலவும் உல்லாசிகளின் உடலைப் போர்த்தும் சல்லாத் துணிகள் நெய்ய நேர்த்தியான நூல் தயாரித்துக் கொடுத்து பெருமை தேடிக் கொள்ளும் பூமிதான் அது; ஆனால் இயந்திரத்தை முடுக்கும் தொழிலாளர் நிலையோ மிக மிகப்பயங்கரமாகயிருந்தது. உண்ணச் சரியாக உணவு கிடையாது; உடுக்க உடை கிடையாது; நாள் ஒன்றுக்கு பதினாறு பதினெட்டு மணிநேரம் உழைத்து ஓடாகியிருந்தனர். இயந்திரம் கக்கும் புகையை சுவாசித்து மரணத்தை அணைத்தோரும் மரணத்தின் வாயிலில் இருந்தோரும் ஏராளம் ஆனால் ஆலையரசர்களோ, தொழிலாளர்களின் குறைகளைக் களைய முன்வரவில்லை- புலி புள்ளிமானிடம் எப்படி இரக்கம் காட்டும்; அதே நிலைதான் அங்கேயும் சல்லாபத்திற்காக அந்தப் புரங்களிலே அடைத்து வைத்திருந்த அழகிகள் ஏராளம் அவர்களின் அழகிற்கு மெருகு தரும் ஆபரணத்திற்காக செலவிடப்பட்ட செல்வம் ஏராளம் இப்படிச் செல்வத்தைச் சீரழித்த மான்செஸ்டர் சீமான்களுக்கு துயர் மேவியிருக்கும் தொழிலாளர் வாழ்வை செப்பனிட துணிவு பிறக்கவில்லை. எங்கெல்ஸன் மான்செஸ்டர் மண்ணை மிதித்தவுடன் இக்கோரக் காட்சியைக் கண்டான்.

ஆலையரசனாக இருந்து அதிகாரம் செலுத்த வேண்டியவன் பாட்டாளிகளின் அவலநிலையை போக்க முற்பட்டான். அப்போது இங்கிலாந்திலே சார்ட்டிஸ்ட் என்றொரு இயக்கம் தொழிலாளர் நலனுக்காகப் பாடுபட்டு வந்தது. எங்கெல்ஸன் அந்த இயக்கத்திலே அங்கம் வகித்து தொழிலாளர்களுக்கு, வீடு கட்டிக் கொடுத்தல், வைத்திய வசதி போன்றவைகள் செய்து கொடுத்தான்; கூலி உயர்வு வேலைப்பளு குறைப்பு இவைகளுக்காகவும் போராடினான் இவனது செய்கை ஆலைஅரசர்களுக்கு ஆத்திர மூட்டிற்று; விளைவு தந்தைக்குச் செய்தி பரந்தது. “உடனே தாயகம் திரும்பு” என்று தந்தையிடமிருந்து கட்டளை பிறந்தது.

எங்கெல்ஸன் தாயகம் திரும்பும்வழியில் அப்பொழுது பாரிஸ் மாநகரில் தங்கியிருந்த புத்துலகச் சிற்பி கார்ல்மார்க்ஸை கண்டான் இச் சந்திப்பு மிக முக்யத்துவம் வாய்ந்தது. இதற்கு முன் ஒரு முறை சந்தித்திருக்கிறார்களென்றும் அதிலே ஒருவரையொருவர் புரிந்துகொள்ளமுடியவில்லை, சந்தேகம் நிழலாடிற்று இம்முறை இருவரும் உள்ளத்தைத் திறந்து காட்டிக் கொண்டனர். கருத்து ஒன்றுபட்ட காரணத்தால் நட்பு வேரூன்றிவிட்டது. இதிலிருந்து இருவரும் இறுதிக் காலம்வரையிலும் ஒரே கொள்கையுடன் பாமரமக்களுக்காவே பாடுபட்டனர்.

தாயகம் திரும்பிய எங்கெல்ஸனை தந்தை சீறினார் “உன்னை அமுதூட்டி வளர்த்தேனே! நீ எனக்கு அழிவைத் தேடுகிறாயே உன் நல்வாழ்விற்காகத்தானே பாடுபடுகிறேன், எளியவர்களின் நல்வாழ்விற்காக முதலாளித்துவத்தின் முதுகெலும்பை முறிக்க வேண்டுமென முரசு கொட்டுகிறாயே! இவற்கா உன்னை சிங்கார மாளிகையில் வைத்து சீராக வளர்த்தேன் சிந்தித்துப் பாரடா! வீணாகச் சீரழியாதே. வீண் வேலைகளில் ஈடுபடாமல் இருக்கும் செல்வத்தை வைத்துக் கொண்டு இறுமாப்புடன் வாழ்” என உபதேசம் செய்தான் புது உலகைக்காணத்துடிக்கும் எங்கெல்ஸனா இச்சொற்களுக்கு செவி சாய்ப்பவன்.

பொதுப் பணியில் தொடர்ந்து ஈடுபட்டுத்தான் வந்தான். ஆட்சியாளர்களின் சந்தேகப் பார்வையும் அவன் மீது விழுந்து கொண்டு தானிருந்தது; சதிக் குற்றம் சாட்டப்பட்டு நாடு கடத்தவும் பட்டான்.

காரல்மார்க்ஸ் சீமான்களின் சீர்கெட்ட போக்கை அம்பலப் படுத்த “காபிடெல்” என்ற நூல் எழுதுவதற்கும் பொதுவுடமையரின் சரித்திரத்திலேயே முக்யத்வம்வாய்ந்த கம்யூனிஸ்ட் அறிக்கை வெளி வருவதற்கும் பெருந்துணை புரிந்திருக்கிறான். காரல் மார்க்ஸ் வறுமையிலே வாடியவர்: வறுமையின் தொல்லையைத் தாங்காது அரசியல் வாழ்வையே துறந்துவிட பல முறை துணிந்ததுண்டு.

அவர் அவ்வாறு செய்திருந்தால் பாட்டாளி உலகம் எத்துணை பெரிய நஷ்டத்துக்குள்ளாகியிருக்கும்; அதனைத் தடுத்து அவனுக்கு ஊக்கமளித்தும், பண உதவி செய்தும் பாட்டாளி உலகிற்கு பணி புரியச் செய்தவன் எங்கெல்ஸன்.

— து. இரத்தினவேலன்

இதோ ஒரு நல்ல படம்!
அசோகா பிக்சர்ஸ்
என் மகள்
ரஞ்சன்—வரலட்சுமி—மைனாவதி
நடித்தது
திருச்சி-தஞ்சாவூருக்கு
ரத்னா பிலிம்ஸ்
தெப்பக்குளம் திருச்சி.

பல்முறை கூறினும் புரியாத பராபரங்கள்!

தென்னாட்டு மக்கள் ஒரு காலத்தில் என்னாட்டவரும் போற்றும்—தொன்மை மிக்க நாகரீகமும் — வான்முட்டும் புகழும் உடையவர்களாய் வாழ்ந்தனர் என்றாலும், இடைக்காலத்தே இருட்குகையில் தள்ளப்பட்டு — உலகின் பார்வையிலிருந்து மறைக்கப் பட்டுள்ளனர்: அண்மையில் தான், அந்த மாபெரும் இனம் நாம்யார்? என்ற வினவினையெழும்பி--விடை கண்டு—ஓரளவு விளக்கமும் பெற்றுவருகிறது! இந்த உள உணர்வு! விடுதலைக்கான விழிப்புகூட சிலருக்கு வேதனையைத் தருகிறது! அந்த சிலரின் மனதிலே வளரும் வேதனை அவர் தம் விவேகத்திற்கு திறைபோடவே — உண்மை திராவிட இனத்தின் வரலாற்றைப் பொய்யெனக்கூறி—திரித்தும் —குறைத்தும் — ஒதுக்கியும் —செதுக்கியும் பாழ்படுத்தும் முயற்சியில் முனைந்துள்ளனர்:. அந்த 'நன் முயற்சியின்' முன் வரிசையில் நிற்கும் அந்த மிகச் சிலர்; நாட்டில் எல்லைகையால்! என்றாவது ஓர் நாள் தூக்கம் கலையும்-அறிவு துலங்கும்—என்ற உறுதியால்!

*   *

நாம் யார்? நம் இனமெது? நம் நாடெது? நம் மொழியெது? அன்றொருநாள் அணி தேர் — புரவி — ஆட்பெரும் படையுடன் உலகம் புகழ ஆண்ட இனத்தோராகிய நாம் —இன்று அல்லலுக்கு ஆட்பட்டு—நாட்டின் செல்வத்தைப் பறிகொடுத்துவிட்டு—ஆற்றாது அழுத கண்ணீருடன் —அரைவயிற்றுக் கஞ்சிக்கு அயலானைத் தொழுது வாழும் இழிநிலை ஏன் ஏற்பட்டது? வாழ்ந்த நாம் வீழ்ந்த தேன்! சூழ்கடல் அரணையும்; சூரர் படையின் சுழலும் வாட்களின் கூர்மையையும் — தாண்டி— நம் சுகவாழ்வினை சூறையாடியது யார்? சுந்தரநாட்டோராம் நாம்—சுருண்டுபோனது ஏன்? சுகத்தை இழந்தது ஏன்? என்ற வினாக்களுக்கெல்லாம் இன்றுவரை நாமே விடையும் தந்து வருகிறோம்! ஒடிந்து சூரியநாராயணசாஸ்திரி; வ.உ.சி; சுந்தரம்பிள்ளை; மறைமலை அடிகளார்; திரு. வி. க.; பி. டி. சீனுவாச ஐயங்கார்; பா. வே. மாணிக்க நாயகர்; பூர்ணலிங்கம்பிள்ளை; உ. வே. சாமிநாதய்யர்;நா.சி.கந்தையா; உமாபதி; பொன்னம்பலம் பிள்ளை; டாக்டர்.. இராதா கிருஷ்ணன்; போன்ற தென்னாட்டு அறிஞர்கள்! இத்தனைப் பெரியார்களையும் துணைக்கழைத்தோம்; 'நாம் யார்' என்ற விளக்கத்தை தெற்றெனவிளக்கியுள்ளனர் வரலாற்று ஏடுகளில் என்று தெளிவு படுத்தினேம்: அப்பொழுதும் சில அவசரக்காரர்கள் ஆரியராவது-திராவிடராவது என்று பாடினர்; அவர்களை அன்புடன் அழைத்தோம்! அன்பரே! அசல் தமிழரே! அருகில்வாரும் —விழிதனைத்தாரும்! தொல்காப்பியமாம்—தொன்மைமிகு ஏடு! அதில் பொருள் அதிகாரத்தின் (490-ம்) மேற்கோளினைப் பாரும்! ஆரியம் நன்று—தமிழ் தீதெனஉரைத் விடம் என்ற பெயரைத்தான் இலக்கியமும்—சரிதமும். ஒப்புக்கொள்கிறது என்பதற்கு— தாகூரின் தேசிய கீதத்தில் வரும் 'திராவிட யுத்சலவங்கா' என்ற அடிகளையும் 'தெக்கணமும் அதிற் சிறந்த திராவிட நற்றிருநாடு' என்ற சுந்தரம் பிள்ளையின் கருத்தையும்- 'நற்புகழ் வடக்கண்—உரை தமிழ் நாடா வழங்கிய முற்கால திராவிடமெனும் பேர் அதற்கு சிறந்தது' என்ற சிவஞான யோகியாரின் பாடலையும்; பல சரித ஏடுகளையும் சான்றாக காட்டினேம்!

*   *

"திராவிடம் தமிழுக்கு மற்றொரு பெயர்; அது தமிழின் திரிபு; வேற்றுமொழியில் 'ழ' கரம் இல்லாததால் தமிழெனும் பெயரைச் சொல்ல இயலாமை பற்றி திராவிடம் என்றனர்; இது பேரறிஞர் உ.வே. சாமிநாதய்யரின் கருத்து; அவரின் தமிழ்ப்புலமையை நாடறியும்; நல்லறிஞர்கள் உணர்வர்;

"அன்னை சீதை"யின் பின்னே ஓடுவோர், என்ன கூறினும் ஏலார் அம்மவோ!

யைக் கடந்தவர் அல்லர்; இனந் தவறிப் பிறந்தவர் அல்லர்; வேற்று மொழியினர் அல்லர்; திராவிட இனத்தில் தோன்றி —திராவிட மொழி பேசி— திராவிட நாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கும்நம்மவர் தான்! அந்த நம் இனத்தோன்றல்களுக்குத்தான் 'நாம்யார்' என்ற பாலபாடத்தை விடுக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம்! புத்துணர்வுக்கான விடிவெள்ளி முளைத்துஆண்டு பல உருண்ட பின்னரும்! விந்தை! என் செய்வது! பள்ளிக்கூடமென்றால் முதல் வகுப்பிலேயே நல்ல மார்க்குகளுடன் தேருபவனும் மூன்றாண்டானாலும் மூளையை சொரிந்து கொண்டு நிற்பவனும் இருக்கத்தானே செய்வர்! நல்லாசிரியன் என்றால் அந்த மூன்றாண்டு பையனுக்கும் முகம் கோணாமல் விளக்கம் தருவது முறை—கடமையும் கூட! எனவே நாட்டுப்பள்ளியில் இருக்கும் சில வளர்ந்த பிள்ளைகளுக்கும் சளைக்காமல் விளக்கம் தரும் நல்லாசான் நிலையில் நாம் இருப்பதால்—'நாம்யார்' என்ற வரலாற்றுத் தொடரில் மேலும் ஒரு சிறு பகுதியை சேர்க்கிறோம்! குன்றாத நம்பிக் சரிந்த இமயத்தின் வளையிலே —ஓடி வந்த எலிக்கூட்டம் செய்த சதி என்றோம்! நம் மன்னர்கள் மதிமயங்கியதால் நேர்ந்த கதி என்றோம்! காரணம் கேட்டனர்! சான்று காட்டினேம்! வண்டி வண்டியாக கொட்டினேம் சரித ஏடுகளை! 'சாய்ந்த இனத்தின் சந்ததே ஜீவனே! அழிவுப் படுகுழியில் தள்ளப்பட்ட உன் இனத்தின் சரித்திரத்தைஆணித்தரமாகக் கூறும் ஏடுகளைப்பார்? அதை எழுதிய வல்லுனர்களை எண்ணிக்கொள் என்று கூறினேம்! அப்பப்பா......எத்தனை பேர் அந்த சான்று பட்டியலிலே! சார்லஸ். ஈ. கவர்; அபிடியூபாடட்; கால்டுவெல்; வின்சன்ட் ஏ ஸ்மித்; எச். ஜி. வெல்ஸ்; என்றிபெரிட்ஜ்; வில்லியம் வில்சன்; ஜேம்ஸ்மர்ரே; என்றி ஒயிட்; இத்தனை மேல் நாட்டறிஞர்கள்! ராமேஸ்; ராகுல சங்கிருத்தியாடீன்; தாகூர்; முகர்ஜி; ரோகோசி; நாகேந்திரநாத்கோஷ்; சந்திரடட்; வர்ஜி; சட்டர்ஜி; பண்டிதநேரு; இத்தனை வடநாட்டறிஞர்கள்! தாயுமானவர்; திருஞான சம்பந்தர்; ராமலிங்கர்; சிவவாக்கியார்; பரஞ்சோதி; தேவநேயர்; சிவஞானயோகிகள்; வி. கோ. தகாவியத்தால்; என்ற வரிதனைக் காட்டி—இனியாவது உளம் தேரும்! என்று கூறி; இன்றல்ல; நேற்றல்ல தொல்காப்பியர் காலமுதல் ஆரிய— திராவிட — உணர்வு தலை காட்டி வருகிறது என்று விளக்கினேம்! அப்பொழுதும் ஐயம் துலங்கவில்லை சிலருக்கு —ஆரியம் — தமிழ் என்று தானே கூறுகிறது தொல்காப்பியம், 'ஆரிய—திராவிட' என்று கூறவில்லையே என்றனர்; பண்டைத் தமிழகத்தில் தமிழே திராவிடம்; திராவிடமே தமிழ்; என்றுதான் கொள்ளப்பட்டு வந்தது! தாயுமானவர்கூட —தமிழ்ச்சொல்லுவேன் — என்பதை 'திராவிடம் புகல்வேன்' என்று அதே பொருளில்தான் கூறியுள்ளார் என்று ஆதாரம் காட்டினேம்! 'ஆரியர் அலறத் தாக்கி' என்று தொடங்கும் அகநானூற்றின் 396ம்பாடலை நினைவிற்கு கொண்டுவந்து— ஆரியர் என்ற ஒரு இனம்— இலக்கியத்தில் — தமிழ் அல்லது திராவிடத்திற்கு மாறான இனம் என்ற பொருளில் கையாளப் பட்டிருப்பதை எடுத்துக்காட்டினேம். நாம் வாழும் இந்த நிலப்பரப்பிற்கு—'திரா அவரது வார்த்தைகளை எடுத்துத் காட்டாக்கிறோம்!

உலகின் பேரகவிதியாம்— கலைப்பேரகவிதியைப் புரட்டினேம் 'நாம் யார்' என்பதற்கு அது தகுந்த அருமையான விளக்கத்தைப்படித்தோம்—தமிழ் —தெலுங்கு— மலையாளம்—கன்னடம், இந்நான்கும் திராவிடமொழி; இம்மொழி பேசுவோர் திராவிட இனத்தவர்—என்ற வரிகளைப் பார்வைக்கு வைத்தோம்!

"தென் இந்தியாவில்—ஏன் வட இந்தியாவிலும் கூட திராவிடர் நாகரீகம் பரவி இருந்தது. ஆரியர்கள் 'இந்தியாவிற்கு வருமுன்பே இங்கு மிகப் பழைய நாகரீகமான திராவிட நாகரீகம் பரவி இருந்தது" என்று 6 வது கடிதத்திலும்—ஆரியர்கள் திராவிடத்தில் தங்கள் கலாசாரங்களை பரப்ப முயன்றனர்; தென்னாட்டிற்கு அந்த நோக்கத்தோடு முதல்முதல் சென்ற முதல் ஆரியன் அகத்தியன்" என்று 10 வது கடிதத்திலும்பண்டித நேரு அவர்கள் உலக சரித்திரத்தில் எழுதியுள்ளதை எடுத்துச் சொன்னேம்!

'லகான்' அங்கே; குதிரைகள் இங்கே! ஜீவாவும் அதில் ஒருவரே!

கொள்ளிக் கட்டையால் தலை சொரிகிறார்!

'திராவிடநாடு' கற்பனையானால் கம்யூனிசம் கனவாகிவிடுமே!

"சாதிப்பிரிவு தென்னாட்டு மக்களாம் — திராவிடர்க்கும் புதிது — ஆரியநுழைவால் அவர்களிடையே சாதிப்பிரிவு தலைகாட்டிற்று: தென்னாட்டில் ஆரியக் கொள்கைகளுக்கு என்றும் எதிர்ப்பு இருந்து வருகிறது" என்று ஆகஸ்போர்டு இந்திய சரித்திரத்தை சான்றாக்கினோம்!

"தென்னாட்டார் திராவிடர்; அவர்க்கு ஒரு தனி நாடு! உயர்தனிப் பண்பாடு! வளமிக்க இலக்கிய ஏடு!" இத்தனையும் உண்டு என்ற விளக்கம் தரும் சான்றுகளை—பட்டயங்களை—செப்பேடுகளை—குறிப்புகளை—நம் நாகரிகப் புதையல்களை வாரிவீசும் அரப்பா மொகஞ்சதாரோ -இவைகளை நினைவு படுத்தினோம்!

பாபிலோனியாவின் பாழடைந்த வீதிகளில் — ரோமாபுரியின் இடிந்து சரிந்த மாளிகைகளில் ஒளிவிடும் முத்தும் —ஒடிந்து வீழ்ந்த மண்டபங்களில் சாய்ந்திருக்கும் தேக்கும் 'நாம் யார்' என்பதை விளக்குகிறது! இப்படி ஆயிரம் ஏடுகள்! வட்சம் சான்றுகள்! கோடிக் குறிப்புகள் காட்ட முடியும் நம்மால்! ஆனால் இத்தனை விளக்கமும் சான்றுகளும்—ஆதாரங்களும் நாம் அரும்பாடுபட்டு தேடிக்காட்டுவது! ஒரு நீக்ரோவிற்கோ! ஜெர்மானிக்கோ! பிரான்சு நாட்டவனுக்கோ! ஜப்பானியனுக்கோ! பாலைவனத்தவனுக்கோ—பனிநிலமாம் நியூசிலாந்துக்காரனுக்கோ! அல்ல! அல்ல! அல்ல! அவர்கள் அனைவரும் எப்பொழுதோ உணர்ந்து விட்டனர்; 'நாம் யார்' என்பதைப் பற்றி! ஆனால் இங்குள்ள நம்மவரில் சிலருக்குத்தான் இன்னும் புரியவில்லை! மாறாக—புரிந்துகொண்டவர்களின் எழுச்சியைக் காண சகிக்காமல்கொள்ளிக்கட்டையால் தலையை சொரிந்து கொள்ளுகின்றனர்; உண்மையென்று உணர்ந்தும் —ஒப்புக்கொள்ள மனமில்லாமல்! பயனற்ற வாதம் பேசித் திரிகின்றனர்; அந்தோ பரிதாபம்! ஆழ்ந்த அனுதாபம் என்று கூறுவதைத் தவிர நம்மால் என்ன செய்ய முடியும், அவர்களுக்காக!

*   *

பல்லாயிரம் மேடைகளில் விளக்கம் தந்தும்—பத்திபத்தியாக ஏடு பலவற்றில் எடுத்துக் காட்டியும்—எண்ணற்ற சான்றுகளை ஓயாமல தீட்டியும் கூட, தோழர் ஜீவாநந்தம் அவர்கள் அவர்தான் 'காப்பிடலை' விட்டு கம்பராமாயணத்திற்கு தாவி இருக்கும் புதிய பாகவதர்—பொதுவுடமை வாதியும் கூடத்தான். அவர் அண்மையில் இமயம் இதழில் பெரியதொரு கட்டுரை தீட்டி இருக்கிறார். சோவியத் சோபிதத்தைப் பற்றியா? அல்ல! அல்ல! கார்ல்மாக்ஸ் தன் ஒரு நாள் உணவிற்காக மேல் சட்டையை விற்றானே, அந்த வேதனை சம்பவத்தைப் பற்றியா? இல்லை! டிராட்ஸ்கியை கொன்றது யார்? பெரியாவிற்கு ஏன் அக்கதி ஏற்பட்டது" என்பன போன்ற தலைப்புகளிலா? பூக் கொய் படலத்தில் கம்பனின் வர்ணனைகளையா? அது கூட இல்லை! அந்த கட்டுரையின் முழு நோக்கம். இரண்டுகண்களையும் இருக மூடிக்கொண்டு திராவிட இயக்கத்தின் மீது மோதுவதைப்போல்அமைந்துள்ளது அந்த கட்டுரை. சாதாரண ஆரம்பப்பள்ளி மாணவனுக்குத் தெரிந்த சரித்திரம் கூட எனக்குத் தெரியாது என்று வெளிப்படுத்தி யிருக்கிறார்—தோழர் ஜீவா—அந்தகட்டுரை மூலம்! தென்னாட்டார் கூரிய மதி படைத்தோர் என்ற நற்புகழுக்கு களங்கமாக மாறிப்போனாயே—அருமைத் திராவிடமகனே! அந்தோ! அனுதாபம்! அனுதாபம்! என்று வருந்துகிறோம்!

"திராவிட நாடு திராவிட இனம் என்பதெல்லாம் வெறுங் கூச்சல்! அது பெரியார்-அண்ணாத்துரை போன்றவர்களின் கற்பனை" இப்படித் தீட்டியிருக்கிறார் தோழர் ஜீவா! பொறுப்புள்ள அரசியல் கட்சியின் "கிளை"த் தலைவர்! கம்யூனிஸ்ட் கட்சியின் திராவிடத் திருமகன்! கூறலாமா இப்படி? அதுவும் தோழர் ஜீவாநந்தம்!!

நாமிருக்கட்டும்! நடுநிலையாளர்கள், நல்லறிஞர்கள்; கட்சிப்பற்றற்றோர்! ஏன்? அவர் இயக்கத்திலேயே இருக்கும் சரிதம்படித்த இளைஞர்கள் என்ன எண்ணுவர்; இப்படியொரு 'பூஜ்யத்தை,யா தலைவர் என்று கூறி வந்தோம் இத்தனை நாட்கள் என்று வருந்தாமலா இருப்பர்! நம் வளர்ச்சி கண்டு எழுந்த பொறாமைத் தீயின் சூடோ? கம்பரசம் பருகியதால் ஏற்பட்ட போதையோ? நாமறியோம்! "சங்க இலக்கியங்களில் சான்றில்லை; 'திராவிடம்' என்ற சொல் காணப்படவில்லை" எனவே நான் ஒப்புக் கொள்ள முடியாது என்ற பாணியில் பேனாவை ஓட்டியிருக்கிறார். 'திராவிடம்' என்ற சொல் மட்டுமா இல்லை சங்க இலக்கியத்தில்!' 'இந்தியா' என்ற சொல் கூடத்தான் இல்லை! ஏன்? 'கம்யூனிசம்' என்ற வார்த்தை கூடத்தான் இல்லை! அதற்காக 'கம்யூனிசத்தை ஏற்க மாட்டேன் என்று கபோதிகூட கூறத்துணியானே! 'இந்து' இந்தியா' என்று இத்துணைக் கண்டத்திற்கு இருக்கும் பெயர் கூடத்தான் வேற்று நாட்டவரான பாரசீகரால் தரப்பட்ட பெயர்! மாற்றான் தந்த பெயர் வேண்டாம் என் மண்ணுக்கு என்று தள்ளியாவிட்டாள் பாரதமாதாவும்-அவர்தம் புத்திரர்களும்! அந்தப்பெயராலேயே விடுதலை வாங்கவில்லையா? அதைப்போலவே! 'திராவிடம்' என்ற சொல்லையும் 'பாகிஸ்தான்' என்பது போல்-லட்சியப் பெயராக்கிக் கோள்வோம்! துணிவுண்டா? இதயத்திலே வலுவுண்டா? தோழர் ஜீவாவிற்கு! திராவிட இனத்திற்கு முழுவிளக்கம் தந்து அப்பெயரின் பொருள் காட்டியவர்; வெள்ளையர்-வெளிநாட்டார்? இந்திய உபகண்டத்தின் வரலாறு தீட்டியோரும்—வெள்ளையர்-வெளிநாட்டார்! ஆரிய இன ஆராய்ச்சி விளக்கம் தந்தவர்களும் வெள்ளையர் வெளிநாட்டார்; ஏன் 'காங்கிரசை ஆரம்பித்தவனும் 'ஹூம்' என்ற வெள்ளையன் -வெளிநாட்டான்? கம்யூனிசத்தை வளர்த்தவனும்-வெள்ளையன்-வெளிநாட்டான்! இந்திய கம்யூனிஸ்டுகளின்-உயிர்நிலையும் - வெளிநாட்டாரிடத்தில்!! 'திராவிடம்' மாற்றான் அளித்த பெயர் என்று தீட்டும் தோழர் ஜீவா உணரவேண்டும்! வெளிநாட்டான்கையில்தானே இருக்கிறது. இந்தியாவில் பறக்கும் கம்யூனிஸ்டு காற்றாடியின் நுனிக்கயிறு என்பதை! தலையை விட்டுவிட்டு வாலைப் பிடிக்கிறாரே!

'ஐக்கிய தமிழகம்' பேசும் இவர் 'திராவிடநாடு திராவிடருக்கே என்பது குறுகிய நோக்கம் என்று தீட்டியிருக்கிறார்! "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற புறநானூற்றை நினைவுபடுத்தியிருக்கிறார்! நாமும் சுலபமாகக் கேட்டு விடலாம் கோப்பெருஞ்சோழனும்- பிசிராந்தையாரும் பொதுவுடமை பற்றிய விவாதங்களிலா ஈடுபட்டிருந்தனர் என்று! சங்ககாலத்தின் நிலை என்ன? காலம் என்ன? உரிமை வாழ்வு நடத்திய சங்க காலத்தவர்-'ஐக்கிய தமிழகத்தையோ' 'திராவிட நாட்டையோ' கேட்கவேண்டிய அவசியத்தில் இல்லை என்பதை நாம் உணர்வதால்! அப்படி கேட்பதில்லை! உரிமை வாழ்வு-விடுதலை வாழ்வுதான் எங்களுக்குத் தேவை! அந்த உரிமை வாழ்விற்கு-விடுதலை வாழ்விற்கு-குறுகிய மனப்பான்மை என்று 'காப்பிடல்' சொல்லுமானால் கவலையில்லை எங்களுக்கு! என்று வெள்ளையன், நான் வெள்ளையன் அல்ல உலகத்தின் பிரஜை என்று கூறுகிறானோ? என்று, ரஷ்யன் நான் ரஷ்யன் அல்ல உலகின் ஒரு பிரஜை என்று கூறுகிறானோ! என்று, பிரஞ்சுக்காரன் நான் பிரஞ்சுக் காரன் அல்ல உலகின் பிரஜை என்று கூறுகிறானோ? என்று ஜெர்மானியன் நான் ஜெர்மானியன் அல்ல உலகின் ஒரு பிரஜை என்று கூறி — இனப்பற்றைக் கலைத்து விட்டு-நாட்டின் எல்லைக் கோட்டை அழித்துவிட-முன்வருகிறானோ-அன்றேநாம்! நாம் திராவிடர் அல்ல. நாமும் உலகின் ஒரு பிரஜை என்று கூறிக் கொள்ளத் தயார்! அந்த நிலைக்குமுன் - 'திராவிட நாடு திராவிடருக்கே' என்பதுதான் நம் பேச்சு! மூச்சு! லட்சியம்! இதயகீதம்! எல்லாம்!!

ஏ. கே. வில்வம்.

அந்தோ ரஷ்ய மாதா! உன் சுவீகாரப் புதல்வர்களின் அறியாமையைப் பார்!



கே. சிவகுரு—இலங்கை

கம்பராமாயண பிரசங்கம் ஒன்றுக்கு 'ஜீவா'வை அழைத்தால் வருவாரா? சார்ஜ் என்ன ?

கம்யூனிஸ்ட்டு 'ஜீவா'வைத் தானே குறிப்பிடுகிறீர்கள் ! நிச்சயம் வருவார் ! இரண்டாவது கேள்விக்கு பதில் அவரையே கேட்டுப்பாரும் !

* * *

மாகரன்—கிண்டி

தமிழ் தனித்தியங்குமா ? ஐயன்மீர் !

இயங்கும்—நிச்சயம் இயங்க முடியும் அன்பரே ! இயங்கி இருப்பதை காவியம் காட்டுகிறது.

* * *

ஆர். பதி.—சென்னை

நிதி மந்திரி சுப்பிரமணியம் மடாதிபதி பதவிக்குத்தான் தகுதியுடையவர் என்று நான் கருதுகிறேன் ! உங்கள் எண்ணம் !

உங்கள் எண்ணத்தை அடியோடு மறுக்காது, ஆனால் ஒரு திருத்தம்; உடன் ஆச்சாரியாரையும் சேர்த்துக்கொள்ளவும்.

* * *

சாமிநாதன், கோவை

டால்மியாபுர போராட்டம்—கல்லிதிட்ட எதிர்ப்பு போராட்டம், ரயில் நிறுத்தப் போராட்டம் எத்தனை பேருக்கு சோறு போட்டது என்பவர்களுக்கு என்ன பதில் கூறுவது?

'டல்லஸ்' 'காஷ்மீர்தினம்' 'லோசன்பார்க்' சம்மந்தமான போராட்டங்கள் எத்தனை ஏழைகளுக்கு சோறு போட்டிருக்கிறது என்று உடனே கேளும் நீர் !

* * *

கண்ணதாசன் எழுதும் தொடர்கதை எந்த இதழிலிருந்து ஆரம்பமாகிறது? கதையின் பெயர்?

விரைவில் : பெயர் ':ஆயிரம் தீவு அங்கையர்க்கண்ணி"

* * *

வானன்,—சைகை

தோழர் விநயகத்தை தளபதி என்றழைக்கலாமா?

வேண்டாம் நண்பரே! ' மூன்றடி திருக்குறள் விநயகம்' என்றழையும் ! அது பொருந்தும் !

* * *

சுப்பையா—பெங்களூர்

காமராஜரின் தேர்தல் வெற்றிக்கு ராஜாஜி ஏன் குடியேற்றம் தேர்தலுக்கு பிரசாரம் செய்யவில்லை? காங்கிரஸ்காரராய் இருந்தும் !

காமராஜர் ஆரியர் அல்லவே ! அதோடு ஆச்சாரியாருக்கு கட்சியா முக்கியம்—குலதர்மம் அல்லவா !

* * *

செங்குட்டுவன்—சென்னை

எஸ். பி. ஆதித்தன் நடத்தும் 'தந்தி' பத்திரிக்கை கட்சியோடு கட்சியைமோதவிட முயற்சிப்பதேன் !

வேறு வேலையில்லாததால் !

* * *

பொதுவுடமைப் பித்தன்—புதூர்

'திராவிடம்' என்ற பெயர் மாற்றான் அளித்ததல்லவா. அதை நாம் ஏற்கலாமா ?

'இந்தியா' என்ற பெயர்கூடத் தான் வெளிநாட்டவரான பாரசிகரால் தரப்பட்டது ! ஏன் 'கம்யூனிசம்' என்பதுகூட ஆங்கிலச் சொல்லாயிற்றே ! நிலைக் கண்ணாடி முன் நின்றபின் குற்றங்காணவேண்டும் பிறவற்றில் ! அறிவுடமை அதுதான் !

* * *

செல்வன்—மதுரை

தென்றலாரே ! தமிழ்ப் பெரியார் திரு. வி. க. வின் கடைசி மூச்சு எது ? பேச்சு எது ?

'பத்து ஆண்டுகளில் திராவிட நாடு' என்ற நூல் ! அதுவே அவர் இறுதி மூச்சு ! பேச்சும் கூட !

* * *

ல. சண்முகம்—மதுரை

ஓய் தென்றலாரே—ஆச்சாரியாரைப்பற்றி உங்கள் சுருக்கமான எண்ணம் எது ?

அவர் ஒரு கொலைகாரர்—என்பது சரிதானே !

* * *

பூஞ்சோலை—புளியந்தோப்பு

அன்புத் தென்றலாரே ஆண்களுக்கு எப்பொழுது இன்பம் அதிகரிக்கும்?

லட்சியம் ஈடேறும் பொழுது!

* * *

இரா. கேசவன்—சென்னை

ஐயா. தென்றலாரே—ஆரியர் பூனூல் மாற்றுவதற்கு மட்டும் விடுமுறை விடும் சர்க்கார் வள்ளுவர் நினைவு நாளுக்கு மட்டும் ஏன் விடுமுறையளிப்பதில்லை ?

நம் சர்க்கார் மதச்சார்பற்ற சர்க்கார் என்பதை—செயலால் காட்டுகிறது ! அவ்வளவுதான் ?

* * *

இலக்கியத்தில் காதல்

வேண்டுமா ? வேண்டாமா ?

9 ச. இ. மு. கமால், சென்னை 1.

"இலக்கியத்தில் காதல் பகுதி நிச்சயமாக வேண்டும். இதனால் நன்மைகள் பல உண்டு. "உனது மதன என்கிற...எழுதிக்காட்டட்டுமா?", உனது...என்னும் படகிலே... நான் ஆசைப்படுகிறேன்" போன்ற பகுதிகளைத் தாங்கள் நீக்கியிருக்கலாம். இவை ரசாபாசமாக இருக்கின்றன. மனச் சபலத்தை தட்டியெழுப்பக் கூடியனவாகவும் இருக்கின்றன. எனவே சாதாரண உவமை நயத்துடன் அப்பகுதியை தொடர்ந்து வெளியிடவேண்டுகிறேன்."

* * *

10. ராசகுமாரி, தூளை, சென்னை 7.

"இலக்கியத்தில் காதல் தொடர்ந்து வர வேண்டுமென்று அன்புக் கட்டளையிடுகிறேன்."

* * *

11. நா. ராமகிருஷ்ணன், குளித்தலை.

"ஐயோ! இலக்கியத்தில் காதல் சகிக்க முடியவில்லையே அதைப்படிக்கும் எத்தனை திராவிட இளைஞர்களின்-சகோதரிகளின் உள்ளங்கள் விரகதாபத்தால் வேகும்? அருமையான, சுவை மிகுந்த, கருத்தமைந்த கவிதைகளுக்கும் கட்டுரைகளுக்கு மிடையே-அந்தோ! காம உணர்ச்சியை மூட்டிடும - இலக்கியத்தில் காதல் வேண்டாம்...என் சகோதரியிடம் படிக்கக் கொடுக்க என் மனம் கூசுகிறதே!"

* * *

12. அன்புச்செல்வம், 14, சந்திரபானு தெரு, சென்னை 2.

"இலக்கியத்தில் காதல் என்ற பகுதியை கட்டாயமாக தவறுமல் தொடர்ந்து வெளியிட்டு வர வேண்டுகிறேன். ஆசிரியர் எதற்கும் அஞ்சக் கூடாது.

* * *

13. கோதண்டராமன், த. பெ. 341, மேட்டுப் பாளையம்

"எழிலாய் வீசிய தென்றலில் திராவிட எண்ணம், இலக்கியத்தில் காதலும்' இனிமை யூட்டும் குழலியின் பழும், கருத்துடைய கட்டபொம்மனும் கண்டுகளிப் படைந்து வந்தோம்......சற்றே பார்த்து ஆபாசம் அதிகமில்லாதபடி எழுதுக?"

* * *

14. எ. அன்புச்சுடர் (மற்றும் ஆர். பதி, ர. பூபதி, ம. சந்திரசேகரன் கையொப்பங்களுடன்):—

"இலக்கியத்தில் காதல் நீடிக்கவே விரும்புகிறோம்; தொடர்ந்து வெளியிடுக."

* * *

15. இராமநாதன், சென்னை—1.
(மற்றும் 13 நண்பர்களின கையொப்பங்களுடன்):

"இலக்கியத்தில் காதல் தொடர்ந்து வெளிவர வேண்டும். அதுவும் ஆழமாக இருக்க வேண்டுமென்றும் விரும்புகிறோம். அப்பகுதி 'தென்றலுக்கே ஒரு பொலிவைத் தருகிறது'

* * *

16. என். பி ராமையா,
64, முத்து முதலி தெரு,
சென்னை—14

"தென்றல்" கூட்டிவரும் 'இலக்கியத்தில் காதல்' வேண்டுமா—வேண்டாமா எனகிற அபிப்பிராயத்தை கேட்டுள்ளீர்கள். அந்தப் பகுதி "தென்றல்" லோடு வரவேண்டும் என்பது என் கருத்து, அவாவும்கூட.

காதல் அத்தியாயத்தில் சுவை மிக்க தகவல்களை அதன் ஆசிரியர்—புலவர் அவர்கள், வாசகர்கள் அனுபவிக்க வேண்டும் என்கிற நல்லெண்ணத்தோடே 'தென்றல்'லிலே கலந்து தந்திருக்கிறார். ஆனால் அவர் அத்தகைய தகவல்களை விளக்கும் முறை தான் சிலருக்கு ருசிக்க வில்லை என்பது தெரிகிறது. அதாவது உவமை நயத்திற்கென கையாளப் படும் வார்த்தைகள் சிற்சில நேரங்களில் ஆபாசத்தைத் தொடுகின்றன. 'தென்றல்' கருத்துக்கும் அது உடன் பட்டதல்ல என்றே நான் நம்புகிறேன். சாதாரண உவமை நயமே போதும்; உற்சாகத்தோடு வரவேற்கிறோம்.

* * *

17. க தங்கவேலன், மணப்பாறை:

"காதலும் வீரமும் தான் கன்னித் தமிழரின் கரைகாண முடியாத பண்பாடு. ஆதலால்...ஆழமாகவும் அகலமாகவும்...வாரா வாரம் இடை விடாது தொடர்ந்து தருமாறு ஆசைப் படுகின்றேன்"

* * *

கல்யாணசுந்தரம்—சென்னை

இலக்கியத்தில் காதல் அதிகம் காமச்சுவையையே தருகிறது. தென்றல் பத்திரிக்கை குடும்பத்தில் எல்லோரும் படிக்கிறோம். தரங்கள் காமச்சுவை பட ஷி பகுதி தருவதால் மனைவியைத் தவிர வேறு யாரும் பார்க்காதபடி மறைத்து வைத்துப் படிக்கிறேன், வள்ளுவனின் காதல் பகுதிகளை காதல் வர்ணனையாகவே, தாருங்கள், இதைவிட சுவை அதிகமாகும்; காமச்சுவை வாழ்வில் ஈடு பட்டவர்களுக்கு தானுகவே ஊற்றெடுக்கும். அதற்கு விமர்சனம் தேவையில்லை. காதல் விமர்சனம் மனப் பண்பையே மேலும் வளர்க்க உதவும்.

தித்திக்கும் தேன் தமிழில்,

.. தெவிட்டாத தெள்ளமுதாய்

கண்ணதாசன்

எழுதும் புதிய தொடர்கதை!

துல்லிய மலர்கள் கொஞ்சச்
சோடி சேர் பறவை ஆர்ப்ப,
மெல்லியர், நல்லார் மூவர்
வெஞ்சிறைப்பட்டு வாடும்...

ஆயிரம் தீவின் கண்ணே
அழகுசேர் சோழன் செல்வன்
போயினன் ! அங்கே கண்ட
புதுமைகள் சொல்வேன் மாதோ !

நவம்பர் 13ம் தேதி முதல்



தென்றல் தரும் இன்பம்

கரியநற் கூந்தல் மேகம்
களிப்புறச் காற்றில் ஆடி
சிறியவள் முகத்தில் வந்து
சித்திரம் வரையுங்காட்சி

அழகினுக் கழகே செய்யும் !
ஆடவர் காணுங் காலை
குழைவுரு நெஞ்சமேனும்
கூழெனக் குழையுமாதோ !

"உன் மன மண்டபத்திலே ஊசலாடிக் கொண்டிருக்கிற எண்ணங்களை என் செல்வமே! நான் அறிவேன் ! அந்த எண்ணங்கள், என் சிந்தையை மட்டும் சிதைக்காதவரை, எனக்கு அதைப்பற்றிக் கவலை யில்லை, கரை மோதிய கப்பலும் எனக்கு நலமே புரிந்தது! புதுமை உலகின் ஜனன பூமியே! உன் கதைகளைச் சொல்! உன் சிக்கலைத் தீர்க்க என் வாளும் தோளும் பயன்படும். உம்...சொல்! சோழ வளநாட்டான் இந்தச் சுந்தரமுகத்தின் சோகந்துடைப்பான் !"

சித்திர நடையில் முத்தெனத் தொடரும், புதுமைக் கதை !

சந்தாதார் ஆகுங்கள் :: அல்லது .. உங்களூர் ஏஜண்டிடம் பதிவுசெய்து கொள்ளுங்கள் !